செம்மங்குடி கோபாலகிருஷ்ணனின்

Rs.1000/-

# Learn
# In a Week

# ஒரே வாரத்தில் கற்கலாம்

தமிழ்

## PHOTOSHOP

* Tool Box
* Selection Tools
* Layers
* Gradient Effect
* Layer Styles
* Filters
* Color Corrections
* Borders
* Colors
* Patterns

இலவசம்
3 DVDs

***By: Semmangudi GOPALAKRISHNAN .V alias GK***

*Publishers :*

**CIIT Infotech**

New No. 45 (old AP969), 2nd Floor, 70th Street, 11th Sector, K.K. Nagar,
Chennai - 600 078, Tamil Nadu, India.
**Land Mark:** Amman Koil Bus Stop
11th Sector → Guru Ragavendra Hospital → V P Textiles → 70th Street.→
opp.side 2nd Building (4 story building)
**www.ciitinfotech.com   Email: vgk_gk@yahoo.co.in**   Cell: **94444 51485**

# எங்களது புத்தகங்கள்

## Hardware Books மூன்று Volumeகள்

**1) Volume -1 Rs.1000/- Free 3 DVDs**
Complete Assembling, Trouble Shooting, O/S Installation, Device Drivers, Core 2 Duo Assembling.

**2) Volume -2 Rs.1000/- Free 3 VCDs**
Connecting of 4 Hard Disks, Web/Digital Camera, TV/Caputre Card, Multi Meter, Second Harddisk Partition, Windows 7 Installation, Windows 7 Upgrade, 130 கேள்விளுக்கு பதில்கள்

**3) Volume -3 Service Engineer Rs.1,000/- Free 4 DVDs**
Complete Servicing, Windows XP Installation, VIRUS Removal, Data Recovery, Earth Testing, Static Power Discharge. RAM Service (Memory), SATA to IDE Converter GHOST, System Restore.

## Networking - LAN Books இரண்டு Volumeகள்

**4) Volume - 1. Free 3 VCDs. Rs.1000/-**
Networking Fundamentals,Topology, HUB/Switch,Peer to Peer, IP Address, Subnet Mask, Network Configuration, Network Printer, Wireless LAN, Wireless Internet.

**5) Volume -2 (Admin. 2003 Server) Rs.1000/- Free 3 DVDs**
2003 Server Installation Live, MMC, Users, Groups, Permissions, Rights, Account Policy, Audit Policy, DHCP, DNS, upgrade to Domain Controller, Terminal Server, Thin Client

## 6) LAPTOP Servicing- Free 3 DVDs Rs.1,000/-
Dismantling, Servicing, Assembling, Laptopஐ சுலபமாக பிரித்து Service செய்து திரும்ப Assemble செய்யலாம்

## 7) Video Editing- Free 3 DVDs Rs.1,000/-
Video Capturing, Fireware Card, Pinnacle Capture card, Video Editing, Titling, Transperancy, Transitions, Hollywood Effects, Plugins, Exporting, CD, DVD Writing

## 8) Computer Basics - Free 3 DVDs. Rs.1000/-
Wordpad, Notepad, Windows Media Player, CD Writing, Printing

## 9) Office Automation - Free 3 DVDs. Rs.1000/-
MS Word, MS Excel, MS Power Point, Internet, Outlook Express, E-Mail, Yahoo Messenger, Chating, PDF etc.,

## 10) Photoshop - Free 3 DVDs Rs.1000/-
Tool Box, Selection Tools, Layers, Gradient Effect, Layer Styles, Filters, Colour Corrections, Borders, Patterns, அனைத்தையும் தன்னந்தனியாக கற்று செய்யலாம்.

## 11) Pagemaker - Free 3 DVDs Rs.1000/-
Complete Course, Books, Visiting Card, Wedding Card, Lables, Strickers, Advertisements, Bill Books, அனைத்தையும் தன்னந்தனியாக கற்று செய்யலாம்.

## 12) Corel Draw - Free 3 DVDs Rs.1000/-
Pick Tool, Shape Tool, Roughen Brush Tool, Smart Drawing, Polygon Tool, Text Tool, Fill Tool, Edit Menu, Layout Menu, அனைத்தையும் தன்னந்தனியாக கற்று செய்யலாம்.

## 13) Export Business - Free 3 DVDs Rs.1,000/-
ஏற்றுமதி தொழில் தொடங்குவது முதல் சரக்குகளை ஏற்றுமதி செய்து இறக்குமதியாளரிடமிருந்து பாதுகாப்பாக பணம் பெறுவது வரை மிகவும் எளிமையாக விவரிக்கப்பட்டுள்ளது. Complete Deatils about Exports.

Copyright: **V. GOPALAKRISHNAN**
First Edition: June 2011

India Rs.1000/- Postage extra
Foreign: Rs.2000/- Including Postage

## முன்னுரை

அன்பார்ந்த வாசகர்களே,

**கைத்தொழில் ஒன்றை கற்றுக்கொள் கவலை உனக்கில்லை ஒத்துக்கொள்**

**"ஏட்டுச் சுரக்காய் கறிக்கு உதவாது"** என்பது பழமொழி

அது போல நாம் கல்லூரியில் படிக்கின்ற பாடத்திட்டங்களின் மூலம் பெறப்படுகின்ற கல்வி அறிவானது நாம் செய்கின்ற வேலைக்கு பயனுள்ளதாக இருப்பதில்லை என்பதை யாவரும் அறிந்த உண்மை. நாம் தனியாக செயல்முறை பயிற்சியோடு படிக்கின்ற படிப்புகள்தான் ஒரு நல்ல வேலை வாய்ப்பை பெறுவதற்கும், நாம் செய்கின்ற வேலைக்கும் பயனுள்ளதாக இருக்கின்றன.

இன்றைய நாகரீகமான உலகில் கம்ப்யூட்டரின் பயன்பாடு மிக மிக அதிக அளவில் உள்ளது என்பதை யாவரும் அறிவோம். எனவே கம்ப்யூட்டர் சம்பந்தமான பாடங்களை செயல்முறை பயிற்சியுடன் நன்கு படித்து நல்ல வேலை வாய்ப்பை பெறுவதோடு நல்ல ஊதியமும் பெறலாம்.

DTP தெறிந்தவர்களுக்கு வயது வரம்பு கல்வித் தகுதியின்றி அதிக அளவில் வேலை வாய்ப்பு உள்ளது. முக்கியமாக PhotoShopல் பயிற்சி இருந்தால் மிக நல்ல வருமானம் ஈட்டலாம். இன்று நாம் பார்க்கும் அனைத்து விளம்பரங்களும் PhotoShopல் செய்யப்பட்டவைகள். PhotoShopஐ கற்பது மிகவும் சுலபம். PhotoShopல் செய்யக்கூடிய வேலைகளை செய்வதும் சுலபம். வேலை வாய்ப்புகளுதம் சுலபம் அல்லது சுயதொழில் செய்வதும் சுலபம். PhotoShopல் செய்யக்கூடியவைகளை தெளிவாகவும், சுருக்கமாகவும் செயல்முறை பயிற்சியுடனும் எளிதில் புரிகின்றபடி இந்த புத்தகம் மற்றும் DVDகளை தயாரித்துள்ளோம். ஒரே வாரத்தில் நல்ல பயிற்சியையும் பெறலாம். இவற்றின் மூலம் நீங்கள் கண்டிப்பாக ஒரு சிறந்த DTP Operatorஆக செயல்படலாம் என்பதை உறுதியாக கூறுகிறேன்.

உங்கள் அன்பன்,
**செம்மங்குடி V. கோபாகிருஷ்ணன்** *alias* **GK**

# INDEX


Photoshop Introduction .......... 5

ஒரு புதியதாக பைலை Open செய்தல். .......... 12

Background contents .......... 14

Layers .......... 17

Image Editing .......... 21

Tool Box .......... 22

Selection Tool .......... 24

ஒரு போட்டோவின் Background நிறத்தை மாற்றி அமைத்தல் .......... 56

Stroke மெனு .......... 57

Wrap Text மெனு .......... 66

Foreground/Background Colour .......... 76

Cut & Paste/Copy & Paste .......... 79

Layer Styles. .......... 80

Transform Menu . .......... 89

Define Pattern Menu. .......... 93

Colour Handlingஅல்லது Colour Corrections. .......... 96

Menu Bar .......... 107

Edit Menu . .......... 114

Preset Manager Menu .......... 116

Image Menu .......... 122

Layer Menu .......... 126

Select Menu .......... 132

View Menu .......... 133

Window Menu .......... 134

Colour Menu .......... 136

# Photoshop

Photoshop என்பது ஒரு Application Software. Adobe என்ற கம்பெனியின் அனேக தயாரிப்புகளில் இதுவும் ஒன்று. இதில் Photoகளை பலவிதங்களில் வடிவமைக்கலாம். மற்றும் Textஐ பல வடிவங்களில் உருவாக்கலாம். அழகிய போட்டோ ஆல்பங்களை தயாரிக்கலாம்.

DTPஎன்றால் Desk Top Publishing என்பதன் சுருக்கம். இதை அனைவரும் அறிவார்கள். முழுமையாக DTPஐ செய்ய கீழ்கண்ட மூன்று Softwareகளில் பயிற்சி தேவை.

1) Page Maker
2) Photoshop
3) Coral Draw

இந்த Photoshopல் அனேக Versionகள் உள்ளன. அதன் விவரங்கள் பின்வறுமாறு.

Photoshop 7
Photoshop CS
Photoshop CS2
Photoshop CS3
Photoshop CS4
Photoshop CS5

அனேக Versionகள் இருந்தாலும் ஏதாவது ஒன்றில் பயிற்சி பெற்றால் போதுமானது. எல்லா Versionகளிலும் சுலபமாக வேலை செய்யலாம். அடிப்படையில் எல்லாமே ஒன்றுதான். அடுத்து அடுத்து வரும் புது Versionகளில் சில சிறப்பு அம்சங்கள் கூடுதலாக காணப்படும். இங்கு விவரிக்கபட்டுள்ள விளக்கங்கள் முலமாக Photoshop 7 மற்றும் Photoshop CS ஆகிய வற்றில் சுலபமாக வேலை செய்யலாம்.

## Photoshopஐ Open செய்தல்:

கீழ்க்கண்ட வழிகளில் Open செய்யலாம்.


1) Start → All Programs → Photoshop அல்லது
2) Desktopல் அதற்குரிய ஐகான் இருந்தால் Double Click செய்து Open செய்யலாம். அல்லது
3) Start Menuவில் இருந்தால் Double Click செய்து Open செய்யலாம்.

முதன் முதலாக அடுத்த பக்கத்தில் உள்ள விண்டோ தோன்றி சில வினாடிகள் கழித்து மறைந்து விடும். அதனை அடுத்து போட்டோஷாப்பிற்கான விண்டோ ஆகும்.




Start Menuவில் உள்ள Photoshop Menu

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.





இந்த விண்டோவின் கீழ் பாகத்தில் இந்த Softwareஐ தயாரிக்கும் பொழுது இதில் பணியாற்றியவர்களின் பெயர்களை காணலாம். அவற்றில் இந்தியர்களின் பெயர்களையும் காணலாம். குறிப்பாக சில தமிழ்நாட்டினரையும் காணலாம். இந்த விண்டோ தோன்றி சில வினாடிகள் கழித்து மறைந்து விடும். அதனை அடுத்து போட்டோஷாப்பிற்கான 8வது பக்கத்தில் உள்ள விண்டோ தோன்றும்.

Photoshop CS ஆக இருந்தால் மேலே உள்ள விண்டோவிற்கு பதிலாக கீழ்க்கண்டவாறு தோன்றி சில வினாடிகள் கழித்து மறைந்து பக்கத்தில் உள்ள விண்டோ தோன்றும்.




Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.




இங்கு Check Boxல் உள்ள டிக்கை அகற்றினால் அடுத்த தடவை இந்த விண்டோ தோன்றாது,

இங்கு Closeஐ Click செய்யவும். உடனே அடுத்த பக்கத்தில் உள்ள விண்டோ தோன்றும்.


GK

இந்த விண்டோவில் 8 மெனுக்கள் உள்ளன. அவற்றின் பயன்கள் பின்வறுமாறு:

1. Photoshop அடிப்படை விவரங்கள்
2. Advanced Techniques
   விவரங்களை internet மூலம் தெரிந்து கொள்ளலாம்
3. Photoshop 7ல் இருந்ததை விட கூடுதலான சிறப்பு அம்சங்கள்
4. சில Tips மற்றும் Trickகள் பற்றி
   PDF Formatல் விவரிக்கப்பட்டுள்ளது.
5. Colour Management அதாவது நிறங்களை கையாள்வது பற்றி
6. புதிய சிறப்பு அம்சங்கள் பற்றி ஒரு சிறப்பு பார்வை
7. புதியதாக சேர்க்கப்பட்ட சிறப்புகளின் முக்கிய பயன்பாடுகள்
8. மேலும் வரக்கூடிய புதிய சிறப்பு அம்சங்கள் Internet மூலமாக

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

இந்த விண்டோவில் அனேக அயிட்டங்கள் உள்ளன. அவற்றின் பட்டியல் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.




Photoshopஐ Open செய்ததும் அந்த விண்டோவில் காணப்படும் Optionகள்.

1) Title Bar

2) Image Title Bar

3) Menu Bar

4) Option Bar

5) Status Bar

6) Tool Box

7) Pallette Well

8) Palette


இவைகள் தவிர வலது பக்கத்தில் சில சிறிய விண்டோக்கள் உள்ளன. இவைகள் Palette எனப்படும். இவைகள் வேண்டாம் எனக் கருதினால் அதனுடைய வலது மேல் முனையில் உள்ள Close பட்டனை கிளிக் செய்து Close செய்து விடலாம்.

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.


## Title Bar




இங்கு இடது பக்கத்தில் Softwareன் பெயரை காணலாம். வலதுபுறம் மூன்று பட்டன்கள் உள்ளன. இவற்றை பற்றி ஏற்கனவே உங்களுக்கு தெரிந்து இருக்கும்.அவைகள் பின்வருமாறு:





## Minimise பட்டன்:



இதை கிளிக் செய்தால் Photoshop தாற்காலிகமாக மறைந்து சிறியதாக இடதுபுறம் கீழ்பாகத்தில் இருக்கும். வேண்டும்போது திரைக்கு திரும்ப கொண்டு வரலாம்.

## Maximise பட்டன்:



இது சிறியதாக உள்ள விண்டோவை திரை முழுவதும் தோன்றச் செய்கிறது. திரும்பவும் கிளிக் செய்தால் சிறியதாக மாறி தோன்றும்.

## Close பட்டன்:



இது போட்டோஷாப்பில் வேலை முடிந்தபிறகு அந்த பைலை Close செய்ய உதவுகிறது.

## Image Title Bar:




இதில் கீழ்க்கண்ட விவரங்கள் உள்ளன.

1) File Name
2) File Extension
3) Zoom size in %
4) Layer Number
5) Colour Mode (RGB அல்லது CYMK)

## Menu Bar:




இந்த மெனு பார் Title Barக்கு கீழே உள்ளது. மெனுக்களின் பெயர்கள் ஒரே வரிசையில் உள்ளன. ஒவ்வொரு மெனுவையும் Click செய்தால் அநேக Sub Menuக்களை காணலாம். இதில் 9 மெனுக்கள் உள்ளன. இவைகள் தலைப்புகள். இவைகள் ஒவ்வொன்றின் கீழ் அநேக மெனுக்கள் உள்ளன. நாம் செய்கின்ற செயலுக்கு தகுந்தவாறு அதற்குரிய மெனுவை இயக்க வேண்டும்.

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

## Option Bar:




இது Menu Barக்கு கீழே உள்ளது. போட்டோஷாப்பில் ஒரு Tool Box உள்ளது. அதில் அநேக Toolகள் உள்ளன. ஒவ்வொரு Toolலும் அநேக Optionகள் உள்ளன.Tool Boxல் உள்ள ஒரு Toolஐ Select செய்தவுடன் அந்த Toolக்கான Optionகளை இங்கே காணலாம். இதில் உள்ள Optionகள் Toolலுக்கு தகுந்தவாறு மாறும்.

எனவே ஒரு Toolஐ செலக்ட் செய்த உடன் அதற்குரிய Optionகள் இங்கு தோன்றும். தேவையான Optionகளை செலக்ட் செய்து பயன்படுத்தலாம்.

## Status Bar:




விண்டோவின் கீழ் பாகத்தில் உள்ளது. பயன்பாட்டில் உள்ள Toolலின் செயல்களை இங்கே காணலாம். அதாவது Select செய்யப்பட்ட Toolலின் செயல்களை இங்கே காணலாம். இங்கு பயன்படுத்தப்படும் Toolகளுக்கு தகுந்தவாறு சில விவரங்களை காணலாம்.

மேலும் கீழ்க்கண்ட விவரங்களையும் காணலாம்.

1) போட்டோவின் Zoom Size

2) File size

## Tool Box:

இதில் அநேக Toolகள் உள்ளன. மேலும் இதில் உள்ளே Toolகள் தனக்குள்ளே அநேக Toolகளை கொண்டுள்ளன. சாதாரணமாக இது இடது பக்கத்தில் தோன்றும். இந்த Tool Boxஐ நமது விருப்பப்படி எங்கு வேண்டுமானாலும் நகர்த்தலாம். இத பற்றி தனியாக விவரிக்கப்பட்டுள்ளது.


## குறிப்பு:

பொதுவாக Offsetல் பிரிண்டிங் மற்றும் டிஜிட்டல் பிரிண்டிங் செய்வதற்கு Inch, Centimeter, Milimeter ஆகிய அளவுகளை Width மற்றும் Heightகளில் பயன்படுத்த வேண்டும். மற்றபடி Web Design போன்றவற்றிற்கு Pixel என்ற அளவினை பயன்படுத்த வேண்டும்.


Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

## Pallette:


Pallette என்றால் சிறிய விண்டோ. Photoshopல் அநேக Palletteகள் உள்ளன. Open செய்த உடன் முதலில் மூன்று Palletteகள்வலது பக்கத்தில் தோன்றும். தேவை இல்லை என்றால் Palletteன் வலது மேல் பக்கத்தில் உள்ள Close பட்டனை Click செய்து Close செய்து விடலாம். சில Paletteகளின் படங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.




Navigator Palette




Layer Palette




Color Palette


Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

**ஒரு புதியதாக பைலை Open செய்தல்:** Shortcut Key Ctrl + N


File → New

புதியதாக ஒரு பைலை Create செய்ய File மெனுவிலுள்ள New என்பதை கிளிக் செய்யவும்.

அல்லது Ctrl + N (Shortcut Key) உபயோகிக்கவும்.




உடனே கீழ்க்கண்ட விண்டோ தோன்றும்.





**Name:** இந்த Name என்ற இடத்தில் பைலுக்கு ஒரு பெயரை பூர்த்தி செய்யவும்.


Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

## Preset Sizes:

இங்கு முதலில் Custom என தோன்றும். Custom என்றால் நமது விருப்படி தேவையான அளவுகளை பூர்த்தி செய்தல் என்று பொருள். எனவே நமது விருப்படி தேவையான அளவுகள் இருக்கவேண்டும் என்றால் Custom என்பதை செலக்ட் செய்து Width மற்றும் Height ஆகிய இடங்களில் தேவைப்படும் விவரங்களை பூர்த்தி செய்யவும்.

அது தவிற Ready Madeஆக அனேக அளவுகள் உள்ளன. இங்கு உள்ள Pulldown மெனுவை கிளிக் செய்தால் தோன்றும் பட்டியலில் இருந்து தேவையான Sizeஐ செலக்ட் செய்தும் பயன்படுத்தலாம்.




இங்கு பைல் அளவு Width மற்றும் Height என்ற இடங்களில் Inchesல் கொடுக்கப்பட்டுள்ளது.

போட்டோஷாப்பை பொருத்தவரை இரண்டு விதமாக பைல்களை Create செய்யலாம்.

1) Print செய்வதற்காக
2) Web Design செய்வதற்காக

Print செய்வதாக இருந்தால் ஒரு பைலை Create செய்ய கீழ்க்கண்டவாறு Settingகளை செய்ய வெண்டும்.

அதாவது Width மற்றும் Height என்ற இடங்களில் அங்குலம் அல்லது சென்டி மீட்டரை செலக்ட் செய்ய வேண்டும்.

Weg Designற்கு பயன்படுத்துவதாக இருந்தால் Width, Height ஆகிய இடங்களில் Pixel என்பதை செலக்ட் செய்ய வேண்டும்.

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

**Background contents:**

இங்கு Whiteஐ செலக்ட் செய்யவும். இதனால் Tool Boxல் உள்ள Background White ஆக தோன்றும்.

**Resolution:**

Resolution என்ற இடத்தில் 72 என உள்ளது. இது தானாகவே (By Default) பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. Resolution என்பது படத்தின் தரத்தை குறிப்பிடுகிறது. குறைந்த எண்ணிக்கை, தரம் குறைவாகவும், அதிக எண்ணிக்கை, தரம் மிகவும் சிறப்பாகவும் இருப்பதை குறிப்பிடுகிறது.


அதாவது படத்தின் தரத்தை பொருத்து Resolution குறைவு அல்லது Resolution அதிகம் என கூறலாம்.

ஒரு பைலின் தரம் அதன் Resolutionஐ பொருத்தது. Resultion குறைவாக இருந்தால் Fileன் Size சிறியாக இருக்கும். Resolution அதிகமாக இருந்தால் பைலின் Size பெரியாக இருக்கும்.

ஒரு பைலின் Resolutionஐ பொருத்து அந்த பைலின் தரம் மற்றும் Size மாறுபடும். பயன்பாட்டிற்கு தகுந்தபடி பூர்த்தி செய்யவும். Resolution அதிகமானால் பைலின் அளவும் (File size) பெரியதாக இருக்கும். Quality மிகவும் நன்றாக இருக்கும்.

ஆனால் Resolution குறைய குறைய Qualityயும் குறையும். File sizeம் குறையும்.


தேவையான விவரங்களை பூர்த்தி செய்து OKஐ கிளிக் செய்யவும்.





இங்கு Width மற்றும் Height என்பதை வேண்டிய அளவுகளில் கொடுக்கவும்.

Resolution என்ற இடத்தில் 300, 600, 1200 என்று நாம் கொடுத்துக் கொள்ளலாம். சாதாரணமாக 300 போதும். படம் மற்றும் எழுத்துக்கள் இன்னும் தரமாகவும், தெளிவாகவும் இருக்க வேண்டுமானால் மற்ற அளவுகளை பயன்படுத்துவது இன்றியமையாததாகும். Resolution அதிகரிக்க File Sizeம் அதிகரிக்கும்.

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.




Pixels அளவு Select செய்யப்பட்டுள்ளது. இதனால் File size சிறியதாக இருக்கும். அதே சமயம் படத்தின் தரமும் குறைவாக இருக்கும். Web Designல் பயன் படுத்தலாம்.





Centimeter (cm) அளவு Select செய்யப்பட்டுள்ளது. தேவைப்பட்டால் Inchesஐயும் Select செய்யலாம். இதனால் File size பெரியதாக இருக்கும். அதே சமயம் படத்தின் தரமும் நன்றாக இருக்கும். Printing செய்வதாக இருந்தால் இவ்வாறு பயன்படுத்தவேண்டும்.

தேவையான விவரங்களை பூர்த்தி செய்த பிறகு OKஐ கிளிக் செய்யவும்.

உடனே அடுத்தப் பக்கத்தில் உள்ள விண்டோ தோன்றும்.

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

Photo Shopஐ Open செய்தவுடன் முதலில் கீழ்க்கண்டவாறு தோன்றும்.




**File Type:**


Photoshopல் Create செய்யப்படும் பைல்கள் PSD என்ற File Extension உடன் காணப்படும். உதாரணத்திற்கு Sample என ஒரு பைலை Save செய்தால் Sample.psd என உருவாகும்.

GK

கீழ்க்கண்ட பைல்களையும் Photoshopல் Open செய்து கையாளலாம்.

JPEG, GIF, BMP, TIF

பைல்களை மேலே உள்ள Formatலும் Save செய்யலாம். அவ்வாறு Save செய்ய Format என்பதை Select செய்தால் எல்லாவிதமான பெயர்களும் தோன்றும். அவற்றில் தேவையானதை Select செய்து Save செய்யலாம்.




Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

## Layers

Layer என்றால் ஒன்றன் மீது ஒன்று அடுக்கி வைக்கப்பட்டது என்று பொருள். போட்டோஷாப்பில் அனைத்து செயல்களும் இந்த Layerகளில்தான் செய்யப்படுகின்றன. அதாவது Photoshopன் முக்கிய செயல்பாடு இந்த Layerகள் மூலம்தான் செய்யப்படுகின்றன.

ஒரு பைலில் பல உருவங்கள் இருந்தால் அந்த படம் பல Layerகளினால் உருவாக்கப்பட்டதாக இருக்கும். ஒவ்வொரு உருவமும் தனித்தனி Layerகளில் இருக்கும்.

Text அதாவது எழுத்துக்கள் தனியாக ஒரு Layerல் இருக்கும். மொத்தத்தில் ஒரு பைல் பல Layerகளின் தொகுப்பு என்பதை மனதில் கொள்க.

இவ்வாறு தனித்தனி Layerகளில் இருப்பதால் நமக்கு தேவையான மாற்றங்களை ஒரு Layerல் உள்ள உருவத்திலோ அல்லது Textலோ செய்யும் பொழுது மற்ற Layerகளில் எந்தவிதமான பாதிப்பும் ஏற்படாது.

ஒரு Layerல் உள்ள உருவத்தை (Image) நமது விருப்பப்படி எங்கு வேண்டுமானாலும் நகர்த்தலாம். தேவையான மாற்றங்களை செய்யலாம். மேலும் ஒன்றன் மீது ஒன்று என அநேக Layerகள் இருக்கும்பொழுது Layerகளின் வரிசையையும் மாற்றி அமைக்கலாம். அதாவது 3வது வரிசையில் உள்ள Layerஐ 1வது நிலைக்கு அதாவது மேலே முதலாவதாக கொண்டு வரலாம்.

குழப்பமாக இருக்கிறதா? இன்னும் கொஞ்சம் விளக்கமாக புரியும்படியாக விளக்குகிறோம்.

ஒரு Layer என்றால் ஒரு பக்கம்.

இரண்டு அல்லது மூன்று கண்ணாடி போன்ற தாள்களில் தனித்தனியாக படங்களை வரையுங்கள். எல்லா பேப்பர்களிலும் ஒரே இடத்தில் வரையாமல் வெவ்வேறு இடங்களில் வரையுங்கள். பிறகு மூன்றையும் ஒன்றன் மேல் ஒன்றாக சேர்த்து வைத்து பாருங்கள். ஒரே தாளில் வரைந்தது போன்று தோன்றும். இந்த தனித்தனி தாள்கள்தான் Layerகள் என சொல்லப்படும். தனித்தனியாக பக்கங்களில் மாற்றங்கள் செய்யலாம்.

ஒவ்வொரு Layerரும் கண்ணாடி தாள் போன்றது. அதாவது Transparent ஆக இருக்கும். எனவே பல Layerகளை சேர்த்து வைத்து பார்த்தால் தனித்தனி Layerகளில் உள்ளவைகள் எல்லாம் சேர்ந்து ஒன்றாகவே தோன்றும். இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட வெவ்வேறு Layerகளை வேண்டுமானாலும் பயன்படுத்தலாம்.

**Layer 1**

**Layer 2**

**Layer 3**

**Layer 4**

இங்கு உள்ள நான்கு வரிகளும் நான்கு தனித்தனி Layerகளில் உள்ளன.

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

இந்த Layerகள் இரண்டு விதமாக உருவாகின்றன.

1) தானாகவே தோன்றும்

2) நாம் தனியாக உருவாக்குதல்.

முதன் முறையாக ஒரு புதிய பைலை Open செய்ததும் ஒரு Layer தானாக தோன்றும். எல்லா பைல்களிலும் Back ground என ஒரு Layer உள்ளது. செய்கின்ற செயல்களை இந்த Layerகளில் பதிவாகும்.


1





2




3




மூன்று தனித்தனி படங்கள்.




மூன்று தனித்தனி படங்களும் ஒன்றாக தோன்றச் செய்த பிறகு இவ்வாறு ஒரே பைலில் தோன்றும்.


Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

**Layer Palette:** Short Cut Key - F7

Windows → Layers

இது ஒரு சிறிய விண்டோ. Layerகளை கையாள்வதற்கு இது மிகவும் அவசியம். இந்த Layer Palette தோன்ற செய்ய இரண்டு வழிகள் உள்ளன.

Windows மெனுவில் உள்ள Layers என்பதை கிளிக் செய்யலாம் அல்லது F7 என்ற கீயை அழுத்தலாம். உடனே இந்த Layer Pallete தோன்றும்.




**இந்த Layer Paletteன் பயன்பாடுகள்:**

1) புதிய Layerகளை உருவாக்குதல்
2) தேவை இல்லாத Layerகளை Delete செய்தல்
3) தற்காலிகமாக Layerகளை மறைந்து (Hide) வைத்தல்.
4) வேலை செய்ய வேண்டிய Layerஐ Active செய்தல்

Layer Palleteல் உள்ள Create Layer என்பதை கிளிக் செய்தால் புதிய Layer உருவாகும். தேவையில்லாத Layerஐ Select செய்து Deleteஐ கிளிக் செய்தல். அந்த Layer Delete ஆகிவிடும்.

தேவை இல்லாத Layerஐ தாற்காலிகமாக மறைத்து வைக்க (Hide) அந்த Layerன் இடதுபுறத்தில் உள்ள கண் ஐகானை Click செய்தால் மறைந்து விடும்.

Text Toolஐ கிளிக் செய்து எழுத்துக்களை அடித்தால் தானாக ஒரு புதிய Layer உருவாகிவிடும்.

அதே போல Copy செய்து paste செய்தாலும் புதிய layer உருவாகிவிடும்.

Layer Palleteல் எல்லா Layerகளையும் வரிசையாக காணலாம். எவ்வளவு Layerகள் இருந்தாலும் Active Layerல்தான் மாற்றங்கள் செய்ய முடியும்.

Layer Paletteல் மாற்றங்கள் செய்ய வேண்டிய Layerல் Click செய்தால் அந்த Layerஆனது Active Layer ஆக மாறிவிடும்.

Layer Paletteல் ஒரு Layer நீல நிறத்தில் இருந்தால் அந்த Layer ஆனது Active Layer ஆக உள்ளது என்று பொருள்.

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

**Active Layer:**

அநேக Layerகள் உள்ள ஒரு பைலில் ஒரு Layerல் மாற்றங்கள் செய்ய வேண்டுமானால் முதலில் அந்த Layerஐ Active Layerஆக மாற்ற வேண்டும். ஒரு நேரத்தில் ஒரே ஒரு Layerதான் Active Layerஆக இருக்கும். இதை அநேக வழிகளில் செய்யலாம்.

1) Layer Palleteல் தேவையான Layerஐ செலக்ட் செய்தல்

2) Option Barல் உள்ள Auto Select Layerல் டிக் அடித்தல்




தேவையான படம் அல்லது Textஐ கிளிக் செய்தால் Active Layerஆக மாறிவிடும்.

இவ்வாறு தேவையான படத்தை கிளிக் செய்தால் சில நேரங்களில் வேலை செய்யாது. ஏன் எனில் அநேக படங்கள் இருக்கும் பொழுது நாம் சரியாக கிளிக் செய்து இருக்க மாட்டோம்.

இந்த சூழ்நிலையில் Layer Paletteல் அந்த Layerஐ செலக்ட் செய்து Active Layerஆக மாற்றலாம்.

கம்ப்யூட்டர்கள் இல்லாத இடமே இல்லை.
கம்ப்யூட்டர்களைப் பற்றி மிகவும்
சுலபமாக எல்லோரும் தெரிந்து கொள்ளலாம்.
அது மிகவும் வாழ்வில் உபயோகமாக இருக்கும்.
கம்ப்யூட்டர்களைப் பற்றிய அனைத்து விபரங்களையும்.
மிகவும் சுலபமாக தெரிந்து கொள்ள இன்றே வாங்குங்கள்.

**Learn in a Week** ஒரே வாரத்தில் கற்கலாம் என்ற Hardware புத்தகம்.

**மூன்று Volumeகள்**

**Volume - 1 Volume - 2**


**Volume - 3 (Service Engineer)**


Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

# Image Editing


அநேக படங்கள் உள்ளன. ஒவ்வொன்றிலும் இருந்து ஒரு குறிப்பிட்ட பகுதியை காப்பி செய்து ஒரு புதிய பைலில் Paste செய்தால் ஒரு புதிய படம் உருவாகும். அந்த புதிய படத்தில் பல படங்களில் உள்ள காட்சிகள் காணப்படும். இதை Image Editing என்பர்.








மூன்று தனித்தனி படங்கள்




முன்று படங்களும் ஒரே பைலில் Copy செய்த பிறகு
உருவான புதிய பைலின் தோற்றம்.

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

# Tool Box



போட்டோ ஷாப்பை Open செய்ததும் திரையில் இது சாதாரணமாக இடது பக்கத்தில் உயரவாக்கில் தோன்றும். இதை நமது விருப்பப்படி எங்கு வேண்டுமானாலும் நகர்த்தி வைத்து பயன்படுத்தலாம்.

இதில் மொத்தம் 67 வகையான Toolகள் உள்ளன. ஆனால் நமக்கு இந்த Tool Boxல் தெரிவது 33 Toolகள்தான். இந்த Tool Boxல் தெரிகின்ற ஒரு சில Toolகள் தவிர மற்றைய Toolகளுக்குள் அநேக Toolகள் அடங்கி உள்ளன.

ஒரு Toolன் கீழ் பாகத்தின் வலது மூலையில் ஒரு முக்கோணம் இருந்தால் அதனுள் மேலும் Toolகள் உள்ளன என்று பொருள். அந்த முக்கோணத்தை கிளிக் செய்தால் அதில் அடங்கி உள்ள மற்ற Toolகளை பார்க்கலாம்.

Tool Boxல் காண்பிக்கப்படும் Tool கடைசியாக பயன்படுத்தப்பட்டது. அதாவது நாம் ஒரு Toolல் உள்ள ஏதாவது ஒரு Toolஐ பயன்படுத்தினால் அவ்வாறு பயன்படுத்தப்பட்ட Tool தான் இந்த Tool Boxல் தோன்றும்.

முக்கோணம் இல்லாமல் இருக்கும் Toolகளில் வேறு Toolகள் கிடையாது. ஒவ்வொரு Toolற்கும் Shortcut கீ உண்டு. ஆனால் சில Toolகளுக்கு Shortcut கீ கிடையாது.

மொத்தமுள்ள 67 Toolகளுக்கும் தனித்தனியாக Shortcut கீகள் கிடையாது. Tool Boxல் காணப்படும் Toolகளுக்குதான் Shortcut கீகள் உள்ளன. அந்த ஒரே Shortcut கீ அந்த Toolல் அடங்கி உள்ள மற்ற Toolகளுக்கும் பொருந்தும்.

ஒரு Toolன் மீது மவுசை வைத்தால் அந்த Toolன் பெயரையும் மற்ற Toolகளையும் காணலாம். மேலும் Toolலின் பெயரின் அருகில் அதற்குரிய Shortcut கீயையும் காணலாம்.


இந்த Tool Box வேண்டாம் என கருதினால் மேலே உள்ள நீல நிற பட்டையை (Blue Colour) Double கிளிக் செய்தால் மறைந்துவிடும். திரும்ப வேண்டும் என கருதினால் அதே போல Double கிளிக் செய்தால் உடனே தோன்றிவிடும்.



நீல நிற பட்டைக்கு கீழே கண் போன்று ஒரு படம் இருப்பதை காணலாம். இது போட்டோஷாப்பிற்கான ஐகான். இதை Click செய்தால் Internetல் உள்ள Helpற்கு சென்றுவிடும். அதாவது Internetல் மேலும் தேவைப்படும் விவரங்களை அறியலாம். இதற்கு Internet இணைப்பில் இருக்க வேண்டும். இண்டர்நெட் இணைப்பு இல்லாவிட்டால் இதற்கு வேலை இல்லை.

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

## Tool Boxன் தோற்றம் மற்றும் Toolகளின் பெயர்கள்




Photoshop CS ஆக இருந்தால் Tool Boxன் மேல் பக்கத்தில் உள்ள நீல நிற பார்டரின் கிழ்ப்பகுதியில் கண்விழிக்கு பதிலாக பறவையின் சிறகு தோன்றும். மற்றபடி செயல்கள் அனைத்தும் ஒரே மாதிரியாகவே இருக்கும்.




இப்பொழுது Tool Boxல் உள்ள Toolகள் பற்றி விரிவாக பார்ப்போம்.

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

# Selection Tools

Selection என்றால் தேர்வு செய்தல் என்று பொருள். போட்டோஷாப்பில் ஒரு படத்தில் ஒரு குறிப்பிட்ட பகுதியையோ அல்லது தேவைப்படும் பகுதியையோ தேர்வு செய்து வேலை செய்ய வேண்டி வரும். இதற்கு Selection Toolகள் பயன்படுத்தப்படுகின்றன. அனேக Selection Toolகள் உள்ளன. இடத்திற்கு தகுந்தவாறு பொருத்தமான Selection Toolஐ பயன் படுத்தலாம். Tool Boxல் உள்ள கீழ்க்கண்ட Toolகள் Selection Toolகளில் அடங்கும்.

1) Rectangular Marquee Tool
2) Elliptical Marquee Tool
3) Single Row Marquee Tool
4) Single Comumn Marquee Tool
5) Lasso Tool
6) Polygonal Lasso Tool
7) Magnetic Lasso Tool
8) Magic Wand Tool

இந்த Selection Toolகளின் முக்கிய பயன்பாடு Select செய்யப்பட்ட இடத்திற்குள்தான் படங்களையோ, எழுத்துக்களையோ வடிவமைக்க முடியும்.

ஒரு Textஐ அடித்தால் செலக்ட் செய்யப்பட்ட இடத்திற்குள்தான் எழுத்துக்கள் தோன்றும். எல்லாவிதமான Toolகளும் Select செய்யப்பட்ட பகுதிக்குள்தான் செயல்படும். அதாவது பயன்படுத்த முடியும்.

அதிக அளவில் Selection Toolகள் மூலம் செய்யக்கூடிய செயல்கள் பின்வருமாறு:

முதலில் தேவையான Selection Toolஐ பயன்படுத்தி ஒரு பகுதியை செலக்ட் செய்து கொள்ள வேண்டும். அடுத்து கீழ்க்கண்ட செயல்களை செய்யலாம்.

1) Cut செய்யலாம்
2) Copy செய்யலாம்
3) வெட்டி எடுத்து வேறு இடத்தில் வைக்கலாம்
4) நிறங்களை மாற்றலாம், Fill செய்யலாம்
5) சுற்றி Border போல உருவாக்கலாம்
6) Duplicate நகல்கள் செய்யலாம் (Ups செய்யலாம்)

இன்னும் அநேகவிதமான செயல்களை நாம் அடிக்கடி செய்ய இந்த Selection Toolகள் மிகவும் அவசியம்.

Photoshopல் Selection Toolகளின் பயன்பாடு மிக மிக அதிகம். அவைகளை ஒவ்வொன்றாக பார்ப்போம்.


Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

இப்பொழுது Tool Boxல் உள்ள Toolகள் பற்றி விரிவாக பார்ப்போம்.

**1) Marquee Tool: (Shortcut Key M - 4 Toolகள்)**

இதில் நான்கு Toolகள் உள்ளன.

1) Rectangular Marquee Tool
2) Elliptical Marquee Tool
3) Single Row Marquee Tool
4) Single Comumn Marquee Tool





**Rectangular Marquee Tool: (Shortcut Key M - 4 Toolகள்)**

ஒரு படத்தின் ஒரு பகுதியை சதுரம் மற்றும் செவ்வக வடிவில் Select செய்ய பயன்படுத்தப்படுகிறது.


ஒரு படத்தின் மீது ஒரு இடத்தில் Click செய்து மவுசை Drag செய்தால் செவ்வக வடிவில் Select ஆகும். இதே செயலை Shift கீயை அழுத்தியவாறு Drag செய்தால் சதுர வடிவில் Select ஆகும்.

இதே செயலை Alt கீயை அழுத்தியவாறு Drag செய்தால் நான்கு புறமும் விரிந்து Select ஆகும்.




Alt+ Drag - Towards all directions    Alt+Shift+ Drag Towards all directions


இந்த Toolஐ செலக்ட் செய்த உடன் Option Barல் கீழ்க்கண்டவாறு தோன்றும்.




Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

## 2) Elliptical Marquee Tool: (Shortcut Key M - 4 Toolகள்)


இது படத்தில் உள்ள ஒரு குறிப்பிட்ட பகுதியை வட்டமான வடிவிலோ அல்லது ஓவல் வடிவிலோ Select செய்யப் பயன்படுத்தப்படுகிறது.




ஒரு படத்தின் மீது ஒரு இடத்தில் Click செய்து மவுசை Drag செய்தால் முட்டை அல்லது வட்ட வடிவில் Select ஆகும்.

இதே செயலை Shift கீயை அழுத்தியவாறு Drag செய்தால் வட்ட வடிவில் Select ஆகும்.
இதே செயலை Alt கீயை அழுத்தியவாறு Drag செய்தால் நான்கு புறமும் விரிந்து ஒரு வட்டம் Select ஆகும்.

## 3) Single Row Marquee Tool:




இது ஒரு படத்தில் பக்கவாட்டில் ஒரு கோடு போல Select செய்யப் பயன்படுகிறது.


Horizontal Line

கோடு ஒரு Pixel அளவில் Select செய்யப்படும்.

ஒரு படத்தின் மீது ஒரு இடத்தில் Click செய்தால் அகலவாக்கில் ஒரு கோடு Select ஆகும்.




## Single Column Marquee Tool:



இது மேல் இருந்து கீழ் நோக்கி ஒரு கோடு போல செய்ய பயன்படுகிறது.


Vertical Line

கோடு ஒரு Pixel அளவில் Select செய்யப்படும்.



### Option Bar


நாம் மேலே பார்த்த Selection Toolஐ செலக்ட் செய்த உடன் கீழ்க்கண்ட Option Bar தோன்றும். ஒரு Selection Toolஐ செலக்ட் செய்த பிறகு இங்கும் தேவைக்கு தகுந்தபடி ஒன்றை Select செய்ய வேண்டும். இதில் தோன்றும் ஐகான்களின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.




Option Barல் உள்ள ஐகான்களின் விவரம் பின்வருமாறு:


## New Selection:

Photoவில் தேவையான ஒரு புதிய Selectionஐ Create செய்ய இதை Select செய்ய வேண்டும். ஒரு சமயத்தில் ஒரு Selectionஐத்தான் Create செய்ய முடியும். Shiftஐ அழுத்தி செய்தால் ஒள்றுக்கு மேற்பட்ட Selectionகளை Create செய்யலாம்.



## Add to Selection:

ஏற்கனவே Create செய்யப்பட்ட ஒரு Selection உடன் மீண்டும் ஒரு புதிய Selectionஐ சேர்த்து ஒரே Selectionஆக மாற்ற இதை Select செய்ய வேண்டும்.




முதலில் ஒரு பெரிய செவ்வாகம் Select செய்யப்பட்டு பிறகு ஒரு சிறிய செவ்வகம் சேர்க்கப்பட்டுள்ளது.

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

## Substract to Selection:


ஏற்கனவே Create செய்யப்பட்ட ஒரு Selectionல் இருந்து ஒரு பகுதியை நீக்கலாம்.



முதலில் ஒரு செவ்வகம் உருவாக்கப்பட்டு அடுத்து ஒரு வட்டம் உருவாக்கி இவ்வாறு மாற்றப்பட்டுள்ளது.

## Interact to Selection:

Create செய்யப்பட்ட இரண்டு Selectionகளில் இருந்து தனித்தனியாக இரண்டு Selection களை உருவாக்கலாம்.



**Feather** - To Make Smoothness on cutting edge.




ஒரு போட்டோவில் Selection Tool மூலம் ஒரு குறிப்பிட்ட பகுதியை செலக்ட் செய்கிறோம். அவ்வாறு செலக்ட் செய்து Cut செய்து எடுக்கும்போது வெட்டப்பட்ட பகுதியின் ஓரங்கள் பிசுறுகள் இல்லாமல் மிகவும் சுத்தமாக இருக்க வேண்டும்.

இவ்வாறு பிசுறுகள் இல்லாமல் மிகவும் சுத்தமாக தோன்றச் செய்ய இந்த Feather பயன்படுகிறது.

ஏதாவது ஒரு Selection Tool மூலம் தேவையான பகுதியை செலக்ட் செய்து ஒரு Selectionஐ உருவாக்கிய உடன் இந்த Feather என்ற கட்டத்தில் ஒரு எண்ணை பூர்த்தி செய்ய வேண்டும். உடனே Selection பகுதியின் விளிம்பு Smooth ஆக தோன்றும். எண்ணிக்கை அதிகரிக்க அதிகரிக்க Smoothness அதிகமாக இருக்கும். இல்லையென்றால் பிசிறுகளுடன் காணப்படும்.

இந்த செயலை கீழ்க்கண்டவாறும் செய்யலாம்.

**Feather Effect - Shortcut Key - Alt + Ctrl + O**

இது Select மெனுவில் உள்ளது. ஒரு குறிப்பிட்ட பகுதியை காண்பிக்க Layer Maskஐ பயன்படுத்துகிறோம். Select செய்யப்பட்ட பகுதி மட்டும் Cut செய்யப்படுகிறது.

Cut செய்யப்பட்ட பகுதி கூர்மையாக தோன்றும். கூர்மையாக இல்லாமல் Smoothஆக தோன்றச் செய்யலாம்.

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

Select மெனுவில் உள்ள Featherஐ கிளிக் செய்யவும்.

Select → Feather...

கீழ்க்கண்ட விண்டோ தோன்றும்.




ஒரு Selectionஐ Create செய்தால்தான் இந்த விண்டோ தோன்றும்.

இங்கு Feather Radius என்ற இடத்தில் தேவையான எண்ணை பூர்த்தி செய்து OKஐ கிளிக் செய்யவும். இப்பொழுது வெட்டப்பட்ட பகுதி Smooth ஆக தோன்றும்.



Original Image

Feather Radius என்ற இடத்தில் பூர்த்தி செய்யப்பட்ட எண்களுக்கு தகுந்தவாறு தோற்றத்தை கீழே காணலாம்.



7 pixels



15 pixels



25 pixels


இந்த Featherஐ Mask செய்யும் பொழுதும் பயன்படுத்தலாம்.

Maskஐ இரண்டு விதமாக செய்யலாம்.

1) Layer Palletteல் உள்ள Mask பட்டன் மூலம் செய்யலாம்.
2) Layer மெனுவில் உள்ள Add Layer Maskல் Reveal All Selection மூலமாகவும் செய்யலாம்.

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

**Move Tool:** போட்டோஷாப்பில் இந்த Tool இல்லாவிட்டால் வேலையே செய்ய முடியாது. ஒவ்வொரு செயலையும் செய்ய இது மிக முக்கியம். மனிதனுக்கு வலது கை பயன்படுவது போல பயன்படும்.



இதன் பயன்பாடுகள்:

1) Select செய்த பகுதியை நகர்த்தலாம்.

2) ஒரு Layerஐ Active Layer ஆக மாற்றலாம். அதாவது Select செய்யலாம்


3) Textகளை நகர்த்தலாம்.

4) படங்களை வேண்டும் இடத்திற்கு நகர்த்தலாம்.

5) இரண்டுக்கு மேற்பட்ட Layerகள் இருந்தால் நமது விருப்பப்படி அடுக்கலாம். அதாவது தேவையான Layerஐ கீழே கொண்டு போகலாம். இவற்றை Layer Paletteல் தான் செய்ய முடியும்.

6) புதிய Layerஐ Create செய்யலம்.

7) தேவை இல்லா Layerஐ Delete செய்யலாம்.




Layer Palette

இது Layer Palette. F7ஐ அழுத்தினால் தோன்றும். இங்கு வரிசையாக Layerகள் உள்ளன. Move Tool மூலம் ஒரு Layerஐ இடம் மாற்றி அமைக்கலாம்.

மாற்றங்கள் செய்ய வேண்டிய Layerஐ இங்கே செலக்ட் செய்யலாம்.

## Option Bar:

இந்த Move Toolஐ செலக்ட் செய்த உடன் Option Barல் கீழ்க்கண்டவாறு தோன்றும்.




Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

இந்த Option Barல் இரண்டு Check Boxகள் உள்ளன.

1) **Auto Select Layer**

இதை பயன்படுத்த இந்த Check Boxல் டிக் அடிக்க வேண்டும்.


இதன் முக்கிய பயன்பாடு ஒரு பைலில் உள்ள ஒரு உருவத்தை கிளிக் செய்த உடன் அந்த உருவம் உள்ள லேயர் Active Layer ஆக மாறிவிடும். இனி அந்த Layerல் தேவையான மாற்றங்களை செய்யலாம்.

இந்த Check Boxல் டிக் அடிக்காமல் இருந்தால் ஒரு Layerஐ Active Layer ஆக மாற்றி அதாவது அந்த Layerல் மாற்றங்கள் செய்ய Layer Palletteல் உள்ள அந்த Layerஐ செலக்ட் செய்ய வேண்டும்.


2) **Show Bounding Box**

Show Bounding Box என ஒரு பாக்ஸ் Option Barல் உள்ளது. இதன் Check Boxல் டிக் அடித்தால் Text அல்லது படத்தை சுற்றி புள்ளிகளுடன் Border தோன்றும்.


இதனால் படத்தை பெரியதாகவோ, சிறியதாகவோ மாற்றலாம். Rotate செய்யலாம். டிக் அடிக்காவிட்டால் கட்டம் தோன்றாது.




Select செய்யப்பட்ட பகுதியில் புள்ளகளுடன் பார்டர் உள்ளது.




Select செய்து இவ்வாறு Rotate செய்யலாம்.






Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

நான்கு Layerகள் உள்ள ஒரு பைல்




இந்த பைலில் நான்கு Layerகள் உள்ளன. ஒரு உருவத்தின் மீது மவுஸ் பாயிண்டரை வைத்து Right Click செய்தால் அதற்குரிய Layer Number தோன்றும்.

நடுப்பகுதியில் நான்கு Layerகளில் உள்ள படங்கள் ஒன்றன் மேல் ஒன்று இருப்பதால் நான்கு Layerகளின் Numberகள் தோன்றுகின்றன.



ஒரு படத்தை Alt கீயை அழுத்தியவாறு Drag செய்து இவ்வாறு வரிசையாக அடுக்கலாம்.

இதில் 4 Layerகள் உள்ளன.

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

## Lasso Tool: (Shortcut Key L - 3 Toolகள்)

இதில் மூன்று Toolகள் உள்ளன.


1) Lasso Tool
2) Polygonal Lasso Tool
3) Magnetic Lasso Tool





### 1) Lesso Tool:(Shortcut Key L - 3 Toolகள்)



பேனாவினால் கோடு போடுவது போல இதன் மூலம் கோடு போடலாம். தேவைப்படும் பகுதியை ஒரு கோடு போடுவது போல போட்டு Select செய்யலாம். மவுஸை Drag செய்து ஆரம்பத்த இடத்தில் முடிக்க வேண்டும். மவுஸை Press செய்தவாறு நகர்த்த வேண்டும். முடிக்க வேண்டிய இடத்தில்தான் விரலை எடுக்கவேண்டும். படத்தில் ஒரு குறிப்பிட்ட பகுதியை செலக்ட் செய்து Cut out போல வெட்டி எடுக்கலாம்.



### 2) Polygonal Lasso Tool:(Shortcut Key L - 3 Toolகள்)



Straight Line Selection

ஒரு படத்தின் தேவையான பகுதியை Trace செய்வது போல வரைந்து Select செய்யலாம். இது நேர் கோடாக தோன்றும்.


Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

மவுசினால் ஆரம்பிக்க வேண்டிய  இடத்தில் Click செய்யவும்.


அடுத்து மவுசை நகர்த்தி Click செய்யவும். உடனே ஒரு நேர் கோடு தோன்றும். திரும்ப மவுசை நகர்த்தி கிளிக் செய்யவும். திரும்பவும் ஒரு கோடு தோன்றும். இவ்வாறு தேவைப்படும் பகுதியை சுற்றி Trace செய்து Select செய்யலாம். கடைசியில் Double click செய்யவும். Selecttion பூர்த்தி ஆகும்.

வரையும் பொழுது Backspaceஐ அழுத்தினால் கடைசியாக வரைந்த கோடு அழிந்து விடும். இதனால் தவறாக வரைந்த கோட்டை அழித்துவிடலாம்.

**NOTE:** இந்த Tool மூலம் உருவாக்கப்படும் Selecttionல் அனேக மிகச்சிறிய நேர்



**3) Magnetic Lasso Tool: (Shortcut Key L - 3 Toolகள்)**





தானாகவே ஒரு படத்தை Select செயய இது பயனபடுகறது. Automatic Selection மவுசால் படத்தின் ஒரு ஓரத்தில் Click செய்யவும். பிறகு படத்தின் ஓரமாக மவுசை நகர்த்தியவாறு Drag செய்யவும். ஆங்காங்கே Click செய்து நகர்த்தவும். கடைசியாக ஆரம்பத்த இடத்தில் Double Click செய்யவும். ஒரு உருவத்ததை மக துல்லியமாக Select செய்யலாம். தேவையான படம் பகுதி தானாக Select செய்யப்பட்டுவிடும்.

நகர்த்தும் போது Mistake ஏற்பட்டால் Del அல்லது Backspaceஐ அழுத்தவும்.



பூ மட்டும் Select செய்யப்பட்டுள்ளது.



பூ மட்டும்  தனியாக வெட்டி எடுக்கப்பட்டுள்ளது.

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.



இங்கு பட்டாம் பூச்சி மட்டும் Select செய்யப்பட்டடுள்ளது.




இங்கு Select செய்யப்பட்ட பட்டாம் பூச்சி மட்டும் Copy செய்யப்பட்டு Paste செய்யப்பட்டுள்ளது. அதாவது தனியாக வெட்டி எடுக்கப்பட்டுள்ளது.




இங்கு பட்டாம் பூச்சிக்கு புதிய Background color கொடுக்கப்பட்டுள்ளது.

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

**Magic Wand Tool:** To Select on colour Basis



இது ஒரு படத்தில் நிறத்தை வைத்து Select செய்ய பயன்படுகிறது. உதாரணத்திற்கு ஒரு படத்தில் சிவப்பு நிறத்தில் உள்ள பகுதியை மட்டும் Select செய்யலாம். சிவப்பு நிறமாக உள்ள இடத்தின் ஓரத்தில் மவுசால் கிளிக் செய்யவும்.

உடனே சிவப்பு நிறம் உள்ள அனைத்து பகுதிகளும் Select செய்யப்பட்டுவிடும். சிவப்பு நிறம் தொடர்ச்சியாக இருக்க வேண்டும். நடுவில் இடைவெளிவிட்டு சிவப்பு நிறம் இருந்தால் Select ஆகாது. ஒரு படத்தின் Background ஒரே நிறத்தில் இருந்தால் அதை மாற்ற சுலபமாக இருக்கும்.

ஒரு முறை Select செய்து முடித்த பின் திரும்பவும் Select செய்தால் புதியதாக Select செய்தது மட்டும் தோன்றும். முந்தைய Selection பகுதி மறைந்துவிடும்.

Shift Keyஐ Press செய்தவாறு புதியதாக திரும்பவம் Select செய்தால் ஏற்கனவே Select செய்த பகுதி மறையாது. புதியதாக Select செய்யப்பட்ட பகுதி முந்தைய Select ஆன பகுதியுடன் சேர்ந்துவிடும்.

ஏற்கனவே Select செய்த பகுதியில் ஒரு குறிப்பிட்ட பகுதியை நீக்க Alt Keyஐ Press செய்து Select செய்யவும்.

**Shift + Drag** - 2வது அடுத்த புதிய Selection

**Alt + Drag** -To remove previously selected portion

இந்த Toolஐ செலக்ட் செய்த உடன் Option Boxல் கீழ்க்கண்டவாறு தோன்றும்.




இதற்குரிய Option Bar. இங்கு கீழ்க்கண்ட Check Boxகளில் டிக் அடிக்கவும்.

☑ Contiguous

☑ Anti-aliased

மேலும் Tolerance என்ற இடத்தில் 32 என கொடுக்கவும். இங்குள்ள எண்ணை அதிகரித்தால் Selection Area கூடும். குறைத்தால் Selection Area குறையும்.




Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.




இந்த Tool மூலம் ஒரு படத்தில் உள்ள மோட்டார் சைக்கிள் தவிர அதனை சுற்றி உள்ள பகுதிகள் செலக்ட் செய்யப்பட்டுள்ளது.




Select செய்யப்பட்ட பகுதி மட்டும் Delete செய்த பிறகு மோட்டர் சைக்கிள் மட்டும் இங்கு தனியாகக் காணப்படுகிறது. இந்த படத்தில் நமக்கு தேவையான Backgroundஐ கொடுத்துக் கொள்ளலாம்.

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

## Selection Toolகளின் Optionகளின் பயன்பாடு





இரண்டாவதாக உள்ள Add to Selection என்பதை Select செய்து ஒரு Selection உடன் மற்றொரு Selectionஐ சேர்க்கலாம்.




ஒரு Selection உடன் மேலும் ஒரு Selection சேர்க்கப்பட்ட படங்கள்

முன்றாவதாக உள்ள Substract to Selection என்பதை Select செய்து ஒரு Selectionல் உள்ள தேவை இல்லாத பகுதிளை நீக்கலாம்.



நீக்கப்பட்ட பகுதிகளுடன் உள்ள Selectionகள்


நான்காவதாக உள்ள Interact to Selection என்பதை செலக்ட் செய்து இரண்டு தனித்தனி செலக்ஷன்களில் தேவையற்ற பகுதியினை ஒரே சமயத்தில் நீக்கலாம்.



இரண்டு தனித்தனி Selectionகளில் வெட்டப்பட்ட பகுதியுடன் உள்ள படங்கள்

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

**Crop Tool :** To Cut unwanted portion



ஒரு போட்டோவில் ஒரு குறிப்பிட்ட பகுதியை மட்டும் பயன்படுத்துவதற்கு இந்த Tool பயன்படும். தேவையற்ற பகுதியை வெட்டி விடலாம். ஆனால் வெட்டப்பட்ட பகுதியை திரும்ப கொண்டு வர இயலாது.

முதலில் இந்த Toolஐ கிளிக் செய்து தேவையான பகுதியை Select செய்யவும். Select செய்யப்பட்டவுடன் Select செய்யப்பட்ட பகுதி மிகவும் பிரகாசமாக தோன்றும்.

பிறகு Enter கீயை அழுத்தவும். வேலை முடிந்துவிட்டது.

Select செய்த பகுதி மட்டும் இருக்கும். மற்ற இடங்கள் காணாமல் போய்விடும்.




இதே செயலை வேறுவிதமாகவும் செய்யலாம்.

Rectangular Marquee Tool மூலம் தேவையான பகுதியை Select செய்யவும்.

அடுத்து Image மெனுவில் உள்ள Cropஐ கிளிக் செய்யவும்.

**Image → Crop**

வேலை முடிந்து விட்டது. Select செய்த பகுதி மட்டும் காணப்படும். ஒரு புதிய பைல் உருவாகிவிடும். Select செய்யப்பட்ட படம் மட்டும் தோன்றும்.



Original Image

Crop Toolஐ பயன்படுத்துவதற்கு முன்பு Original படத்தின் தோற்றம்.

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.



இங்கு Crop Tool மூலம் Select செய்யப்பட்டுள்ள பகுதியை காணலாம். நான்கு புறமும் உள்ள புள்ளிகளை நகர்த்தி Selection செய்யப்பட்ட பகுதியை சிறியதாகவோ அல்லது பெரியதாகவோ மாற்றலாம்.

Select செய்த பிறகு Enterஐ அழுத்தவும் உடனே அந்த பகுதி மட்டும் கீழ்கண்டவாறு தோன்றும்.

GK



Crop Tool மூலம் வெட்டி எடுக்கப்பட்ட பகுதி.

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

## Slice Tool: Shortcut key - K (2 Toolகள்)





Slice என்றால் துண்டு துண்டாக வெட்டுதல் என்று பொருள். சுவற்றில் ஒட்டப்படுகிற ஒரு பெரிய சினிமா போஸ்டர் ஒரே பேப்பரில் Print செய்யப்படுவது இல்லை. உதாரணத்திற்கு 4 அடி நீளம் 4 அடி அகலம் உள்ள ஒரு போஸ்டரை தனித்தனி நான்கு தாள்களில் Print செய்கிறார்கள். பிறகு ஒட்டும் பொழுது வரிசைபடுத்தி ஒட்டினால் ஒரே தாளில் Print செய்தது போல பெரியதாக தோன்றும்.

அதே போல Internet மூலம் அனுப்ப வேண்டிய ஒரு போட்டோ பெரியதாக இருந்தால் அந்த போட்டோவை Upload செய்யவும் திரும்ப Download செய்யவும் அதிக நேரம் பிடிக்கும்.

ஏன் எனில் படம் பெரியதாக இருந்தால் File Sizeம் அதிகமாக இருக்கும். எனவே அந்த பெரிய பொட்டோவை சிறிய துண்டுகளாக (Slice) செய்து அனுப்பி விடலாம். திரும்ப அந்த துண்டுகளை (Slice) ஒன்று சேர்த்து ஒரே படமாக மாற்றி விடலாம். இவ்வாறு Slice செய்ய இந்த Tool பயன்படுகிறது. Web Design செய்வோர் இதை அதிகம் பயன்படுத்துவர்.

### 1) Slice Tool: Shortcut Key - K (2 Toolகள்)



முதலில் ஒரு படத்தை அநேக துண்டுகளாக வெட்டவும். சுமார் 4 துண்டுகளாக வெட்டவும்.

அடுத்து File மெனுவில் உள்ள Save for Web என்ற மெனு மூலம் Save செய்யவும்.

**File → Save for Web**

உடனே நான்கு பைல்களாக Save செய்யப்படும். இனி இந்த நான்கு பைல்களை Internetல் Upload செய்து அனுப்பி விடலாம்.

**கவனத்தில் கொள்க:**

Shift உடன் Drag செய்தால் Rectangular Toolல் சதுரம் உருவாகும்.

Shift உடன் Drag செய்தால் Elliptical Toolல் வட்டம் உருவாகும்.


Alt உடன் Drag செய்தால் நான்கு புறமும் விரிந்து உருவாகும்.

Alt உடன் Drag செய்தால் Rectangular Toolல் சதுரம் உருவாகும்.

Alt உடன் Drag செய்தால் Elliptical Toolல் வட்டமும் உருவாகும்.

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

## 2) Slice Select Tool: Shortcut Key Ctrl+K (2 Toolகள்)




Slice Tool மூலம் அநேக துண்டுகளாக உள்ள பைல்களை திரும்ப ஒன்று சேர்க்க இது உதவுகிறது. மேலும் வெட்டப்பட்ட துண்டுகளை திரும்பவும் இடம் மாற்றியும் பொருத்தலாம்.

## Healing Brush Tool: Shortcut Key - J ( 2 Toolகள்)




சாதாரணமாக உடலில் ஒரு புண் ஏற்பட்டால் அதை ஆற செய்து குணப்படுத்துவதை Healing செய்தல் என்போம். அதே போல சில பழைய போட்டோக்களில் ஆங்காங்கே சுரண்டினால் போல காணப்படும் அல்லது வெள்ளை புள்ளிகள் காணப்படும். அவ்வாறு உள்ள பழைய போட்டோக்களை சரி செய்ய இது உதவுகிறது.

## 1) Healing Brush Tool: Shortcut Key - J ( 2 Toolகள்)



முதலில் போட்டோவை Open செய்யவும். அடுத்து இந்த Toolஐ செலக்ட் செய்து சரியாக உள்ள இடத்தில் Altஐ அழுத்தியவாறு கிளிக் செய்து, சரி செய்ய வேண்டிய இடத்தில் Drag செய்யவும். இப்பொழுது குறைபாடு உள்ள இடம் சரியாக மாறிவிடும். இவ்வாறு குறைகள் உள்ள இடங்களை சரிசெய்து விடலாம்.







Original Photo இதில் ஏராளமான வெள்ளை புள்ளிகள் ஆங்காங்கே உள்ளன.



Healing Brush Tool மூலம் சரி செய்யப்பட்ட பிறகு உள்ள போட்டோ. இங்கு அனைத்து வெள்ளை நிற புள்ளிகளும் அகற்றப்படடு விட்டன.

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

## 2) Patch Tool: Shortcut Key  J ( 2 Toolகள்)




Patch என்றால் ஒட்டுதல். அதாவது ஓட்டைகளை அடைத்தல். சாலைகளில் குண்டும் குழியுமாக இருந்தால் அந்த இடங்களை நிறப்பி சரி செய்து சாலையை சமமாக மாற்றி விடுகிறார்கள். அதேபோல ஒரு படத்தில் தேவை இல்லாத உருவங்களை நீக்கி, நீக்கப்பட்டவைகள் இருந்த இடத்தில் Backgroundஐ தோன்றச் செய்தல்.

உதாரணத்திற்கு ஒரு கார் நிறத்தப்பட்ட சாலை, அந்த கார் இல்லாமல் இருந்தால் எவ்வாறு தோன்றுமோ அதே போன்று தோன்றச் செய்தல்.


ஒருவரது முகத்தில் வெட்டுக் காயம் அல்லது மச்சம் இருந்தால் அவற்றை அகற்றி அந்த இடத்தில் முகத்தின் நிறத்தையே தோன்றச் செய்தல்.

முதலில் மறைக்கப்பட வேண்டிய உருவத்தை செலக்ட் செய்யவும். Marque Tool அல்லது Lasso Tool மூலம் செலக்ட் செய்யலாம். அடுத்து Patch Toolஐ செலக்ட் செய்யவும். இப்பொழுது எற்கனவே செலக்ட் செய்யப்பட்ட உருவத்தை எந்த Background அந்த இடத்தில் தோன்ற வேண்டுமோஅந்த இடத்திற்கு Drag செய்யவும். மவுசில் இருந்து விரலை எடுக்கவும். உடனே உருவம் இருந்த இடத்தில் Background தோன்றும். மறைக்கப்பட வேண்டிய பகுதி பூர்த்தி செய்யப்பட்டு Background தோன்றும்.



Original Image

இந்த படத்தில் உள்ள தொப்பி மறைக்கப்பட வேண்டும்.




தொப்பி மறைக்கப்பட்ட பின்பு

தொப்பி இல்லாமல் இருப்பதை காணலாம்.

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

## **Brush Tool:** Shortcut Key B (2 Tools)







இதில் அநேக டிசைகள் உள்ளன. Borderகள் பல அளவுகளில் உள்ளன. அது தவிர பூக்கள், இலைகள், புல், Spring, Star என அநேக விதமான டிசைகள் உ ள்ளன. இவைகள் மூலம் பல அழகான டிசைன்களை தயாரிக்கலாம்.

இந்த Toolஐ செலக்ட் செய்த உடன் Option Barல் கீழ்கண்டவாறு தோன்றும்.





Select செய்யப்பட்ட Design

இந்த Scroll Barஐ நகர்த்தி தேவையான Designஐ Select செய்யலாம்.


ஒரு Designஐ Select செய்த பிறகு அதன் Preview இங்கு தோன்றும்.




புல் Design மூலம் தயாரிக்கப்பட்ட ஒரு Design வடிவம்.

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

**Pencil Tool: Shortcut Key 2 (2 Tools)**



ஒரு பென்சிலால் வரைவது போல படங்களை வரையலாம்.



Pencil Tool மூலமாக வரையப்பட்ட படங்கள்

---

## ஓர் அன்பான வேண்டுகோள்

இந்த புத்தகம் படிப்பவர்களுக்கு நன்கு புரியும்படியாகவும், படித்ததை செயல்படுத்தக் கூடியதாகவும் இருக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் மிகவும் கஷ்டப்பட்டு தயாரிக்கப் பட்டுள்ளது.

எனவே இதை படிப்பவர்கள் தயவுசெய்து **Xerox** எடுக்க அனுமதிக்க வேண்டாம் என உங்களை அன்புடன் வேண்டிக் கேட்டுக் கொள்கின்றேன்.

**இப்படிக்கு தங்கள் பேராதரவை என்றும் விரும்பும்**

**ஆசிரியர்**
***Semmangudi*** **Gopalakrishnan.V** alias **GK**

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.


## **Eraser Tool:** Short cut Key ‘E’ (3 Tools)




1) Eraser Tool
2) Background Eraser Tool
3) Magic Eraser Tool

இது மூன்று Toolகளை கொண்டது. Erase என்றால் அழித்தல் என்று பொருள். இந்த Tool படங்களை அழிக்க உதவுகிறது.


### 1) Eraser Tool: Shortcut Key ‘E’ (3 Tools)



இது ஒரு சாதாரண Tool. நாம் சாதாரணமாக ஒரு ரப்பரை பயன்படுத்தி அழிப்பது போல செயல்படும்.

முதலில் இந்த Toolஐ Select செய்யவும். Mouse Pointer ஒரு ரப்பர் போல மாறும். மவுஸ் பாயிண்ட்டரை நகர்த்தினால் அழியும். அழிக்க வேண்டிய இடங்களை அழிக்கலாம்.

இதை Select செய்த உடன் இதனுடைய Option Barல் Mode என ஒரு மெனு தோன்றும். இந்த Modeல் 3 வகை உள்ளது. இதில் தேவையானதை Select செய்து அழிக்க வேண்டும்.







1) Brush
2) Pencil
3) Black

இந்த மூலம் ஒரு Photoshop பைலில் ஒரு இடத்தை அழித்தால் அந்த இடம் அழிக்கப்பட்டு விடும். ஆனால் ஒரு Jpeg பைலை அழித்தால் அழிக்கப்பட்ட அந்த இடத்தில் Background நிறம் தோன்றும்.



Original Image
அழிப்பதற்கு முன்பு




Erase Tool மூலம்
அழிக்கப்பட்ட பகுதி

அழிக்கப்பட்ட பின்பு

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

**2) Background Eraser Tool:** Shortcut Key 'E' (3 Tools)



இது Background Colourஐ அழிக்க உதவுகிறது. Background Colourஐ அழித்து புதிய Backgroundஐ தோன்ற செய்யலாம். தொடர்ச்சியாக அழிக்காமல் விட்டு விட்டு அழிக்கும். இதை Select செய்த உடன் Option Barல் Limits என்ற இடத்தில் கீழ்க்கண்ட Optionகள் தோன்றும்.


1) Discontiguous
2) Contiguous
3) Find Edges






இவற்றில் தேவையானதை Select செய்து அழிக்கலாம். Protect Foreground Colour என்பதை Select செய்து அழித்தால் Background Colour மட்டும் அழியும். Foreground Colour அழியாது.

**3) Magic Eraser Tool:** Shortcut Key 'E' (3 Tools)



To Erase full Background.

Backgroundல் தொடர்ச்சியாக உள்ள நிறத்தை அழிக்க இது உதவுகிறது. இதை Select செய்து ஒரு இடத்தில் கிளிக் செய்த உடன் அந்த நிறம் தொடர்ச்சியாக இருக்கும் இடங்களை அழிந்துவிடும். தொடர்ச்சி இல்லாமல் தனித்தனியாக அதே நிறம் இருந்தால் அழியாது.



தொடர்சியாக Background ஒரே நிறத்தில் இருந்தால் அழிக்கப்பட்ட பிறகு இவ்வாறு தோன்றும்.

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

## Clone Tools: Short Cut Key - S (2 Tools)

இதில் இரண்டு வகையான Toolகள் உள்ளன.

1) Clone Stamp Tool

2) Pattern Stamp Tool





ஒரு இடத்தில் உள்ள ஒரு Colourஐ மற்ற இடங்களுக்கும் (அதே Colourஐ) கொண்டு வரும் செயல்தான் Clone எனப்படும். உதாரணத்திற்கு ஒரு காரில் Damageஆன இடத்தை டிங்கரிங் செய்து திரும்பவும் பெயிண்ட் அடிக்கிறார்கள். டிங்கரிங் செய்த பகுதிக்கு Bodyல் உள்ள அதே கலரை அடித்து டிங்கரிங் செய்த இடமே தெரியாதவாறு செய்து விடுகிறார்கள்.

இதே போல போட்டோக்களில் செய்வதற்கு இந்த Clone Tool பயன்படுகிறது. மிகவும் பழமையான போட்டோக்களை சரி செய்ய இந்த Tool மிகவும் பயன் உள்ளதாக இருக்கும். பழைய போட்டோக்களில் முகத்தில் சில இடங்களில் புள்ளி அல்லது நிறம் மாறுபட்டு இருக்கலாம்.

அவ்வாறு இருந்தால் சரியாக உள்ள இடத்தில் உள்ள நிறத்தை எடுத்து மற்ற எல்லா இடத்திலும் Fill செய்து சரி செய்து விடலாம்.

### 1) Clone Stamp Tool: Short Cut Key - S (2 Tools)




Alt Drag then Click

இந்த Toolஐ பயன்படுத்தி நிறம் இல்லாத இடத்தில் அதற்குறிய நிறத்தை கொண்டு வரலாம்.

முதலில் கலர் சரியாக உள்ள இடத்தில் Alt கீயை அழுத்தியவாறு கிளிக் செய்யவும். அடுத்து Colourஐ நிறப்ப வேண்டிய பகுதியில் Alt கீ இல்லாமல்Drag செய்யவும். இப்பொழுது எல்லா இடங்களும் ஒரே Colourல் இருப்பதை காணலாம். மேலும் இந்த Tool மூலம் ஒரு உருவத்தை அனேக இடங்களில் தோன்றவும் செய்யலாம்.



ஒரே ஒரு உருவம் உள்ளது.



இரண்டு உருவங்கள் உள்ளன.

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

## 2) Pattern Stamp Tool: Short Cut Key - S (2 Tools)




Pattern என்றால் ஒரு டிசைன் என கூறலாம். போட்டோஷாப்பில் Readymadeஆக அநேக Ptternகள் உள்ளன. மேலும் நமது விருப்பப்படி புதிய Patternகளையும் உருவாக்கலாம். அவற்றில் தேவையான ஒரு Patternஐ செலக்ட் செய்து படத்தின் ஒரு குறிப்பிட்ட பகுதியில் தோன்றச் செய்யலாம்.


Option Bar + Select + Drag

GK

இந்த Toolஐ Select செய்த உடன் Option Barல் Pattern என தோன்றும். அதில் அனேக Pattenகள் உள்ளன. அவற்றில் தேவையான Patternஐ முதலில் Select செயது Drag செய்யவும்.



Original படம்



Pattern பூர்த்தி செய்யப்பட்ட பிறகு தோன்றும் உருவம்.

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

## History Brush Tool:Shortcut Key - Y (2 Tools)




முதலில் பல மாற்றங்கள் செய்த ஒரு படத்தை மாற்றங்கள் செய்வதற்கு முன்பு எவ்வாறு இருந்ததோ அதே நிலைக்கு திரும்பவும் கொண்டு வர இது உதவுகிறது.

### 1) History Brush Tool:Shortcut Key - Y (2 Tools)



இந்த Toolஐ Select செய்து மாற்றங்கள் செய்யப்பட்ட படத்தில் Drag செய்தால் ஆரம்பத்தில் இருந்த Original நிலைக்கு வந்து விடும். அதாவது மாற்றங்கள் செய்யாமல் இருந்தபோது இருந்த நிலைக்கு வந்து விடும்.

எப்பொழுதுமே நாம் ஒரு போட்டோவில் மாற்றங்கள் செய்வதற்கு முன்பு ஒரு Copy செய்து கொண்டு செய்வது நல்லது. Copy செய்து வைக்க மறந்தால் இது உதவும்.

முதலில் ஒரு படத்தில் Brush Tool மூலம் Brush செய்யவும். அடுத்து History Brush Toolஐ Select செய்து Brush செய்யப்பட்ட இடத்தில் Drag செய்யவும். இப்பொழுது முன்பு இருந்த நிலைக்கு வந்து விடும்.



Brush Tool மூலம் மாற்றங்கள் செய்யப்பட்ட படம்



History Brush Tool மூலம் Drag செய்து ஆரம்ப நிலைக்கு வந்து விட்ட படம்.

### 2) Art History Brush Tool:Shortcut Key - Y (2 Tools)



இதுவும் அதே மாதிரி ஆனால் சற்று வித்தியாசமான Effectகளுடன் வேலை செய்யும்.

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

## Gradient Tool:Shortcut Key - G (2 Tools)




Gradient என்றால் வரிசையாக என்று பொருள். அதாவது நிறம் வாரியாக என்பது பொருள். இங்கு அநேக நிறங்களை வரிசையாக தோன்றச் செய்வது என்று பொருள்.

ஒரே Clickல் அநேக நிறங்களை வரிசையாக தோன்றச் செய்யலாம். அவ்வாறு தோன்றும் நிறங்களை பல வடிவங்களில் தோன்றச் செய்யலாம்.

வட்டம் வட்டமாக


சதுர சதுரமாக

கோம்பு வடிவமாக

எனவே Gradient என்றால் அநேக நிறங்களை கொண்டது என்பதை நினைவில் கொள்க.

அநேக நிறங்களின் கலவை அல்ல. அதாவது அநேக நிறங்களை Mix செய்து ஒரு புதிய நிறம் அல்ல. அநேக நிறங்களை கொண்டது என்று பொருள்.


### 1) Gradient Tool: Short Cut Key - G (2 Tools)



இது அநேக நிறங்களை கொண்டது. Backgroundல் அதிகமாக பயன்படுத்தலாம். Textகளிலும் பயன்படுத்தலாம். இந்த Toolஐ Select செய்தவுடன் Option Barலும் மாற்றங்கள் ஏற்படும். Option Barல் ஐந்து வகையான டிசைன்கள் தோன்றும்.

ஏதாவது ஒரு Select Tool மூலம் செலக்ட் செய்யப்பட்ட ஒரு குறிப்பிட்ட பகுதியிலும் Gradientஐ பயன்படுத்தலாம். இது அனேக Designகளை கொண்டது.

இங்கு Gradientல் ஐந்து Optionகளை காணலாம். அதாவது ஐந்து டிசைன்கள் உள்ளன.







இங்கு Select செய்யப்பட்ட Designதான்
Selected Design கட்டத்தில் தோன்றும்.

5 வகையான டிசைன்கள்

1) Linear Gradient
2) Radial Gradient
3) Angle Gradient
4) Reflector Gradient
5) Diamond Gradient

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

இந்த ஐந்து டிசைன்களில் தேவையான ஒரு Optionஐ Select செய்து செயல்படுத்தலாம். ஒரு Optionஐ Click செய்யவும். அடுத்து மவுசால் ஒரு இடத்தில் கிளிக் செய்து Drag செய்யவும். எந்த திசையில் வேண்டுமானாலும் Drag செய்யலாம்.

மேல் இருந்து கீழாக, அல்லது கீழிருந்து மேலாக

வலது பக்கத்தில் இருந்து இடது புறமாக

இடது பக்கத்தில் இருந்து வலது புறமாக

எந்த கோணத்தில் வேண்டுமானாலும் Drag செய்து கொள்ளலாம். கொஞ்சதூரம் Drag செய்தால் போதுமானது. விண்டோ பூராவும் Select செய்யப்பட்ட Gradient தோன்றும்.

ஐந்து வகையான டிசைன்களின் பயன்கள் பின்வருமாறு:


1) **Linear Gradient:** Drag செய்யும் கோணத்தில் Gradient உருவாகும்.

2) **Angle Gradient:** ஒரு கூம்பு வடிவத்தில் Gradient உருவாகும்.


3) **Radial Gradient:** வட்டம், வட்டமாக Gradient உருவாகும். சிறிய வட்டத்தில் ஆரம்பித்து பெரிய வட்டம் வரை தோன்றும்.

4) **Reflected Gradient:** ஆரம்பம் மற்றும் கடைசி ஆகிய இரண்டிலும் ஒரே நிறத்தில் உருவாகும்.


5) **Diamond Gradient:** சதுரம் சதுரமாக Gradient உருவாகும்.




Linear Gradient




Radial Gradient



Angle Gradient



Diamond Gradient



Reflected Gradient

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.




Grandient பயன்படுத்துவதற்கு முன்பு எழுத்துக்கள்





Grandient பயன்படுத்தப்பட்ட பிறகு எழுத்துக்கள்

**Gradient Editor:**

நமது விருப்பப்படி ஒரு புதிய Gradient டிசைனை உருவாக்க இது பயன்படுகிறது.


Option Barல் உள்ள Gradient Editorஐ கிளிக் செய்யவும். உடனே அடுத்த பக்கத்தில் உள்ள விண்டோ தோன்றும்.



Gradient Editor


அந்த விண்டோவில் உள்ள Presets என்னும் கட்டத்தில் (கீழே கொடுக்கப்பட்டுள்ளது) அநேக Optionகள் (Designகள்) உள்ளன. அவைகள் தானாகவே உருவானவைகள். அவைகளில் ஒன்றை பயன்படுத்தலாம்.

மேலும் புதியதாக ஒரு Gradient Designஐ உருவாக்கி அதை Presets கட்டத்தில் கொண்டு வந்து வைக்கலாம். அதேயே வேண்டும் போது பயன்படுத்தலாம்.




Presets விண்டோ

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.





**ஒரு புதிய Gradient டிசைனை உருவாக்குதல்:**

இங்கு ஒரு Colour Point உள்ளது. இதை Slider எனவும் கூறலாம். இதே போல அனேக Colour Pointகளை உருவாக்கலாம். இப்பொழுது ஒரு புதிய Color Pointஐ உருவாக்க வேண்டும்.

கீழே உள்ள Barல் ஒரு Click செய்யவும். உடனே ஒரு Colour Point தோன்றும். அடுத்து Sliderஐ நகர்த்தி நமக்கு தேவையான நிறத்தை Select செய்ய வேண்டும்.


Color என்ற கட்டத்தில் உள்ள முக்கோணத்தில் Click செய்து தேவையான Colourஐ Select செய்யவும்.





இவ்வாறு செய்து Foreground, Background ஆகியவற்றில் உள்ள நிறங்களைத்தான் Select செய்ய முடியும். நாம் விரும்பும் நிறத்தை Select செய்வது பற்றி அடுத்த பக்கத்தில் விவரிக்கப்பட்டுள்ளது.

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

கீழே இரண்டாவதாக உள்ள விண்டோவில் உள்ள Color Barல் காணப்படும் ஏதாவது ஒரு Colour Pointல் Click செய்யவும். உடனே கீழ்க்கண்ட Colour Picker Window தோன்றும்.




இங்கு Sliderஐ தேவையான கலருக்கு நகர்த்தவும். இடது புறம் உள்ள பெரிய கட்டத்தில் நிறங்கள் மாறுவதை காணலாம்.
அடுத்து இந்த பெரிய கட்டத்தில் தேவையான இடத்தில் Colourஐ Click செய்து Select செய்யவும். அடுத்து OKஐClick செய்யவும். உடனே அந்த நிறம் Colour Pointற்கு வந்து விடும். இவ்வாறு அநேக Colour Pointகளை அநேக Colourகளுக்கு உருவாக்கலாம்.




அடுத்து Name என்ற இடத்தில் ஒரு பெயரை பூர்த்தி செய்து New பட்டனை கிளிக் செய்யவும். உடனே புதிய டிசைனை Presetsல் காணலாம்.

**Colour Pointஐ Delete செய்தல்:**

Colour Point தேவை இல்லை என கருதினால் Delete செய்து விடலாம். Colour Pointஐ செலக்ட் செய்து Del கீ அல்லது Delete பட்டனை அழுத்தவும். உடனே மறைந்து விடும்.

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

## ஒரு போட்டோவின் Background நிறத்தை மாற்றி அமைத்தல்.

பழய Background



ஒரே நிறத்தில் Background உள்ள Original Image.

புதிய Background



ஏற்கனவே உள்ள Background நிறத்தை அகற்றிவிட்டு புதியதாக Grandientஐ Backgroundல் Fill செய்யப்பட்ட பிறகு தோன்றும் படம்.

**Practical:**

இப்பொழுது ஒரு போட்டோவின் Background நிறத்தை மாற்றி வேறு ஒரு நிறம் அல்லது Gradient Design எவ்வாறு கொடுப்பது என்பதை செயல் முறையில் பார்ப்போம்.

முதலில் ஒரு போட்டோவை Open செய்யவும். அடுத்து புதியதாக ஒரு பைலை Open செய்யவும். போட்டோ உள்ள பைலில் தேவைப்படும் பகுதியை Background உடன் வட்ட வடிவிலோ அல்லது செவ்வக வடிவிலோ Select செய்து புதிய பைலுக்கு Drag செய்யவும்.

இப்பொழுது புதிய பைலில் படத்தை Drag செய்து தேவையான அளவிற்கு பெரியதாக மாற்றி எண்டரை அழுத்தவும்.

ஒரு புதிய Layerஐ Create செய்து அதில் போட்டோவை சுற்றி ஒரு Selectionஐ Create செய்யவும்.

படம் உள்ள Layerஐ Select செய்து Magic Eraser Tool மூலம் Background நிறத்தில் கிளிக் செய்யவும். உடனே Background நிறம் மறைந்துவிடும்.

அடுத்து Fill மெனு மூலம் தேவையான நிறத்தை பூர்த்தி செய்யவும் அல்லது Gradient Designஐ பூர்த்தி செய்யவும்.

சில நேரங்களில் படம் உள்ள Layer பின்னால் சென்று விடும். இதனால் படம் தெறியாது. இவ்வாறு இருந்தால் Layer Palatteல் அந்த படம் உள்ள Layerஐ முன்னுக்கு கொண்டு வரவும்.

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

# Stroke மெனு

**Edit → Stroke**


இது Edit மெனுவின் கீழ் உள்ளது. ஒரு படத்தை சுற்றி கட்டம் வரையலாம். அதாவது ஒரு Border வரையலாம். Borderல் உள்ள கோடு மெல்லியதாகவா அல்லது தடிமனாகவோ வேண்டிய அளவில் தோன்றச் செய்யலாம். Borderன் நிறத்தை விரும்பிய கலருக்கு மாற்றலாம்.

முதலில் Selection Tool மூலம் ஒரு Selectionஐ உருவாக்க வேண்டும். ஏன் என்றால் Selectionஐ சுற்றித்தான் கோடு தோன்றும்.


சாதாரணமாக (By Default) இந்த மெனு Disable நிலையில் இருக்கும். அதாவது செயல்படுத்த முடியாது. Selection Tool மூலம் Select செய்த பிறகு Enable ஆகிவிடும்.

முதலில் ஒரு Selection Tool மூலம் தேவையான கட்டம் அல்லது வட்டம் அல்லது செவ்வகம் போன்று ஒன்றை செலக்ட் செய்து கொள்ளுங்கள்.




அடுத்து Editல் உள்ள Strokeஐ Double Click செய்யவும். கீழ்க்கண்ட விண்டோ தோன்றும்.




இங்கு Width என்ற இடத்தில் Pixel எண்ணை கூட்டியோ அல்லது குறைத்தோ கொடுத்தால் அதற்கு தகுந்தாற்போல் கோட்டின் Thickness மாறும். அதாவது தடிமனாகவோ அல்லது மெல்லியதாகவோ மாறும்.

அடுத்து Colour என்ற இடத்தில் தேவையான Colorஐ Select செய்தால் அந்த நிறத்திற்கு கோடு மாறும்.

இப்பொழுது செலக்ட் செய்யப்பட்ட இடத்தில் கோடு உருவாகி இருப்பதை காணலாம். இவ்வாறு ஒரு படத்தை சுற்றி அல்லது Textஐ சுற்றி ஒரு Frame போட்டு அழகு படுத்தலாம்.

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

அடுத்து Location என்ற கட்டத்தில் ஏதாவது ஒரு Radio பட்டனை செலக்ட் செய்யவும்.

**Inside:** செலக்ட் செய்யப்பட்ட கோட்டிற்கு உட்புறம்.

**Center:** கோட்டிற்கு நடுவில்.

**Outside:**கோட்டிற்கு வெளிபுறம்

செலக்ட் செய்யப்பட்ட கோட்டிற்கு உட்புறமோ, நடுவிலோ அல்லது வெளிப்பக்கமாகவோ ஒரு பார்டரை உருவாக்கலாம்.

## Fill Menu: Short Cut Key - Shift + Backspace

**Edit → Fill**

இது Edit மெனுவின் கீழ் உள்ளது. இதன் மூலம் தேவைப்படும் நிறங்களை Fill செய்யலாம் ஏற்கனவே உள்ள நிறத்தை மாற்றியும் அமைக்கலாம்.

Background Colorருக்கு மாற்றலாம்.


Foreground Colorருக்கு மாற்றலாம்.

ஒரு குறிப்பிட்ட பகுதியை செலக்ட் செய்து தேவையான நிறத்தை அந்தப் பகுதியில் மட்டும் மாற்றலாம்.

முதலில் ஒரு Selectionஐ Create செய்யவும்.

அடுத்து Edit மெனுவில் உள்ள Fillஐ டபுள் கிளிக் செய்தால் உடனே கீழ்க்கண்ட விண்டோ தோன்றும்.

**Edit → Fill**




இங்கு Use என்ற இடத்தில் கிளிக் செய்தால் அநேக Optionகள் தோன்றும்.

இங்கு Foreground Colour என்பதை செலக்ட் செய்து OKஐ கிளிக் செய்யவும்.

உடனே Tool Boxல் உள்ள Foreground கட்டத்தில் உள்ள நிறம் Select செய்யப்பட்ட பகுதியில் Fill ஆகிவிடும்.

இவ்வாறு தேவையான Optionகளை செலக்ட் செய்து நிறங்களை மாற்றி அமைக்கலாம்.

இவற்றை Shortcut கீ மூலமும் செய்யலாம்.

**Alt+Backspace :** Foreground Colourஐ Fill செய்ய

**Ctrl+Backspace :** Background Colourஐ Fill செய்ய


Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

**Paint Bucket Tool:** Shortcut Key G (2 Toolகள்)




இது முழுக்க முழுக்க Windows XPல் உள்ள Paint Brush போலவே பயன்படுகிறது. படங்களை வரைந்த பிறகு Colourஐ நிறப்ப வேண்டிய இடத்தில் இந்த Toolஐ செலக்ட் செய்து கிளிக் செய்தால் போதும் Foregroundல் உள்ள நிறம் Fill ஆகிவிடும்.

ஒரு Selection Toolலினால் செலக்ட் செய்த பகுதியிலும் Fill செய்யலாம். வரையப்பட்ட பகுதி சுற்றிலும் இடைவெளி இல்லாமல் கோடு தொடர்ச்சியாக இருக்க வேண்டும்.



Pencil Toolலில் வரையப்பட்ட படம்



Paint Bucket Tool மூலம் ஒவ்வொரு இதழிலும் வண்ணங்கள் Fill செய்யப்பட்டுள்ளது

**Blur, Sharpen and Smudge Tools:** Shortcut Key - R (3 Tools)




இங்கு 3 விதமான Toolகள் உள்ளன. இதற்கான Shortcut key R

**1) Blur Tool:** Shortcut Key - R (3 Tools)



படத்தின் ஒரு பகுதியை Smooth செய்ய பயன்படுகிறது. Sharpஆக உள்ள இடங்களை Smooth ஆக மாற்றலாம். மவுசை Click செய்து Drag செய்தால் அந்தப் பகுதி Smoothஆக மாறிவிடும்.

இரண்டு படங்களை ஒன்றாக சேர்க்க இது பயன்படும். ஒரு குறிப்பிட்ட பகுதியை மங்கலாக தோன்றச் செய்யலாம். திரும்ப திரும்ப Drag செய்தால் மங்கலாக தோன்றும். ஒரே மாதிரியாக இரண்டு படங்கள் உள்ள போட்டோவில் ஒன்றை மங்கலாக தோன்றச் செய்யலாம்.




Original Image



இந்த Tool மூலம் மங்கலாக தோன்றுமாறு செய்யப்பட்டுள்ளது

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

**2) Sharpen Tool:** Shortcut Key - R (3 Tools)



ஒரு படத்தில் மங்கலாக உள்ள பகுதியை பிரகாசமாக தெரியும்படி செய்ய இது உதவுகிறது. மங்கலாக இருக்கும் பகுதியில் கிளிக் செய்து Drag செய்யவும். Bright ஆக தெரியும்.

இந்த Toolஐ Select செய்த உடன் Option Barல் Strength என தோன்றும். இங்கு மாற்றங்கள் செய்து பயன்படுத்தலாம்.

ஆனால் இதைப் பயன்படுத்தினால் போட்டோவின் Quality குறையும்.





**3) Smudge Tool:** Shortcut Key - R (3 Tools)



ஒரு நிறத்தை மற்ற இடங்களுக்கு நிரப்ப உதவுகிறது. ஒரு நிறத்தின் மீது கிளிக் செய்து Drag செய்தால் அந்த நிறம் பரவிக்கொண்டே போகும். படத்தின் ஓரங்களில் Drag செய்து நிறங்களை தேவைக்கு தகுந்தவாறு இழுத்து கொண்டுவந்து Shapeஐ மாற்றலாம். அதாவது தோற்றத்தை மாற்றலாம்.



Original Image

மேலே வெள்ளை நிறத்தில் பிசிறுக்களுடன் உள்ளன.



மேலே வெள்ளை நிற பகுதி பிசிறுக்கள் இல்லாமல் மாற்றப்பட்டு உள்ளன.

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

**Dodge, Burn, Sponge:** Shortcut Key - O (3 Tools)





நாம் போட்டோக்களை எடுக்கிறோம். சில போட்டோக்கள் சரியான Light இல்லாமல் மங்கலாக இருக்கும். அதாவது இருட்டாக இருக்கும். சில போட்டோக்கள் அதிக Light காரணமாக Over Brightஆக இருக்கும். அவ்வாறு எடுக்கப்பட்ட போட்டோக்களை சரியான வெளிச்சத்தில் எடுத்தால் எவ்வாறு இருக்குமோ அவ்வாறு மாற்றிவிடலாம். இருட்டாக அதாவது மங்கலாக உள்ள இடத்தில் தேவையான Brightnessஐ கொண்டு வரலாம். அதே போல Over Brightஆக உள்ள போட்டோவில் தேவையான Darknessஐ கொண்டு வரலாம்.


**1) Dodge Tool:** Shortcut Key - O (3 Tools)



இரவில் எடுக்கப்பட்ட ஒரு போட்டோ அல்லது தேவையான Light இல்லாமல் எடுக்கப்பட்ட போட்டோ நன்கு தெரியாது. முதலில் இந்த Toolஐ Select செய்யவும். அடுத்து அதன் மீது மவுசை கிளிக் செய்து Drag செய்யவும். தேவையான பிரகாசத்துடன் தோன்றும். இதை After Dodge என்பர்.



Darkஆக உள்ள படம்



இங்கு பிரகாசமாக மாற்றிய படம்

**2) Burn Tool:** Shortcut Key -O (3 Tools)




முதலில் பார்த்த Dodge Tool செயலுக்கு நேர் எதிர்மறை. அதிக வெளிச்சத்தில் எடுக்கப்பட்ட போட்டோவை தேவையான வெளிச்சத்துக்கு கொண்டு வரலாம்.

Over Brightஆக உள்ள போட்டோ மீது மவுசால் Click செய்து Drag செய்யவும். Drag செய்து கொண்டு இருக்கும்பொழுதே மங்கலாக மாறுவதை பார்க்கலாம். மங்கலாக இருக்கும் Backgroundஐ பிரகாசமாக மாற்றலாம்.

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

**3) Sponge Tool:** Shorfcut Key - O (3 Tools)

To increase or decrease Color in Photos



போட்டோவில் உள்ள நிறத்தை கூட்டவோ குறைக்கவோ செய்யலாம். இந்த Toolஐ Select செய்தவுடன் Option Barல் Mode என்று தோன்றும். அதை Click செய்தால் இரண்டு Optionகள் தோன்றும்.

1) Desaturate (Black & White) - To Reduce Colour (Darkness)

2) Saturate (Increase Colour) - To Increase Brightness




**Desaturate:** இது நிறத்தை குறைக்க உதவுகிறது. இதை Click செய்து ஒரு Brushனால் Drag செய்தால் நிறம் குறைந்து கொண்டே வரும். இதன் மூலம் ஒரு போட்டோவை Black & White ஆக மாற்ற முடியும்.

**Saturate:** இது நிறத்தை கூட்ட உதவுகிறது. இதை Click செய்து ஒரு Brush மூலம் Drag செய்தால் நிறம் கூடிக் கொண்டே போகும். அதாவது பிரகாசமாக மாறும்.


**Path Selection Tool: Shortcut Key - A (2 Tools)**






Backgroundஐ Cut செய்து Save செய்து வைக்க பயன்படுகிறது. திரும்ப வேண்டும்போது Save செய்த Backgroundஐ பயன்படுத்தலாம். திரும்ப திரும்ப அநேக இடங்களில் பயன்படுத்த உதவியாக இருக்கும். நேரத்தை மிச்சப்படுத்தலாம்.

**2) Direct Selection Tool: Shortcut Key - A (2 Tools)**



Pen Tool மூலம் ஒரு Selectionஐ create செய்கிறோம். அடுத்து Convert Point Tool மூலம் Selectionல் சில மாற்றங்களை செய்யலாம்.


அதே செயலை இந்த Tool மூலமும் செய்யலாம். அதாவது Pen Tool மூலம் உருவாக்கப்பட்ட ஒருSelectionஐ திரும்ப வளைவுகளுடன் மாற்றங்கள் செய்ய இதை பயன்படுத்தலாம்.

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.


## Text Tool: Shortcut Key - T (4 Tools)

எழுத்துக்களை கையாள இந்த Tool பயன்படுத்தப்படுகிறது. இதில் நான்கு விதமான Toolகள் உள்ளன.

1) Horizontal Type Tool
2) Vertical Type Tool
3) Horizontal type Mask Tool
4) Vertical type Mask Tool





## 1) Horizontal Type Tool: Shortcut Key - T (4 Tools)




இது ஒரு சாதாரண Tool. அதிக அளவில் பயன்படுத்தப்படுகிறது. இதை Click செய்தவுடன் Menu Barன் கீழே உள்ள Options Bar மாறிவிடும். Textகளுக்கு தேவையான Optionகளை காணலாம்.


இதை Click செய்து அடித்தால் எழுத்துக்கள் வழக்கம் போல இடதுபுறம் இருந்து வலது புறமாக தோன்றும். மேலும் தானாகவே ஒரு புதிய Layer உருவாகும்.

Text Toolன் Option Bar இரண்டு துண்டுகளாக காண்பிக்கப்பட்டுள்ளது.








## 2) Vertical Type Tool: Shortcut Key - T (4 Tools)



எழுத்துக்கள் மேல் இருந்து கீழ்நோக்கி வரிசையாக செங்குத்தாக தோன்றும்.


## 3) Horizontal Type Mask Tool: Shortcut Key - T (4 Tools)



எழுத்துக்கள் வரிசையாக தோன்றும். ஆனால் Selection செய்யப்பட்டு புள்ளிகளாக தோன்றும்.

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

**4) Vertical Type Mask Tool: Shortcut Key - T (4 Tools)**



எழுத்துக்கள் செங்குத்தாக மேல் இருந்து கீழ் நோக்கி வரிசையாக தோன்றும். ஆனால் Selection செய்யப்பட்டு புள்ளிகளாக தோன்றும்.

இந்த இரண்டு Toolகளிலும் எழுத்துக்கள் அடிக்கும்பொழுதே Select செய்யப்பட்டு தோன்றும். எனவே எழுத்துக்களில் நிறங்களை எளிதாக Fill செய்யலாம்.

தேவையான நிறங்களை Fill செய்து Gradient Effectகளை கொடுக்கலாம். இவற்றை தனி Layerல் உருவாக்க வேண்டும்.

**Alt + Backspace:** Foregroundஐ Select செய்ய

**Ctrl + Backspace:** Backgroundஐ Select செய்ய

எழுத்துக்களை கையாள்வதற்கு Text Toolன் Option Barஐ பயன்படுத்தலாம். அது தவிர Paragraph Pallette (Ctrl + R) என்பதையும் பயன்படுத்தலாம்.

## Paragraph Pallete விண்டோ:


இதற்கான Icon, Text Toolற்கான Option Barன் கடைசியில் உள்ளது.

இதில் இரண்டு Tabகள் உள்ளன.


1) Character 2) Paragraph

Character Tabஐ கிளிக் செய்து Textகள் சம்பந்தமான செயல்களை செய்யலாம்.

Paragraph Tabஐ கிளிக் செய்து ஒரு Paraவில் செய்ய வேண்டிய கீழ்க்கண்ட செயல்களை செய்யலாம்.




இது Paragraph Palette . பாராவில் செய்ய வேண்டிய மாற்றங்களை இதன் மூலம் செய்யலாம்.





இது Character Palette. எழுத்துகளில் செய்ய வேண்டிய மாற்றங்களை இதன் மூலம் செய்யலாம்.

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

## Wrap Text Pallette:

Option Barல் உள்ள Wrap Text பட்டனை கிளிக் செய்த உடன் கீழ்க்கண்ட விண்டோ தோன்றும்.




Textற்கான தோற்றத்தின் வடிவங்களை மாற்றி அமைக்க இது உதவுகிறது. இதன் பயன்பாடு அடுத்த பக்கத்தில் விவரிக்கப்பட்டடுள்ளது.


# Networking - LAN

**Volume - 1, Volume - 2**

உங்களை ஒரு சிறந்த

**System Administrator**

ஆக மாற்றும்.

**Networking - Vol.1**

* Networking Fundamentals
* Star Topology
* Bus Topology
* Hy-brid Topology
* Peer to Peer
* IP Address, Subnet Mask
* Network Configuration
* Printer configuration
* Broad Band Configuration
* HUB, Switch, RJ45, UTP cable, Crimping
* Wireless LAN/ Wireless Internet
* Connectivity in Windows XP
* Simple File Sharing in Windows XP

**Networking - Vol.2**

* Windows 2003 Server Installation
* MMC
* Local Users & Groups
* Permissions
* DHCP
* DNS
* Doamin Controller
* Terminal Server
* Thin Client
* System Security Management
* User Rights



Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

## Wrap Text மெனு

இந்த மெனு எழுத்துக்களின் தோற்றங்களை பல்வேறு Styleகளில் மாற்றி தோன்றச் செய்ய உதவுகிறது. இந்த மெனு Layer மெனுவின் கீழ் உள்ள Type என்ற மெனுவில் உள்ளது. அதாவது Textகளின் தோற்றத்தின் வடிவங்களை மாற்றி அமைக்க இது தோன்றுகிறது.


Layer → Type → Wrap Text

இந்த மெனுவை Double Click செய்தால் கீழ்கண்ட விண்டோ தோன்றும். Option Barல் உள்ள Wrap Text பட்டனை கிளிக் செய்தாலும் கீழ்க்கண்ட Pallete தோன்றும்.




Wrap Text பட்டன்

**Wrap Text Pallette: -** To make different styles







இங்கு Styleல் உள்ள Pulldown மெனுவை கிளிக் செய்தால் அருகில் உள்ள பட்டியல் தோன்றும். அதில் அநேக வடிவங்களை காணலாம்.

முதலில் Layerஐ செலக்ட் செய்யவும். அடுத்து இவற்றில் தேவையானதை செலக்ட் செய்தால் உடனே Text அந்த Sytleல் மாறிவிடும்.

இந்த விண்டோவில் Arc என்பது Select செய்யப்பட்டுள்ளது. இதை செலக்ட் செய்த பிறகுதான் கீழே உள்ளSlideகள் Enable ஆக தோன்றும். இப்போது நம் விருப்பப்படி Textஐ வளைப்பதோ நிமிர்த்துவதோ செய்து கொள்ளலாம்.


இங்கு Horizontal, Vertical என இரண்டு Radio பட்டன்கள் உள்ளன. Horizontalஐ செலக்ட் செய்தால் எழுத்துக்கள் பக்கவாட்டில் தோன்றும்.

Verticalஐ செலக்ட் செய்தால் எழுத்துக்கள் குறுக்கும் நெடுக்குமாக மேல் இருந்து கீழ்நோக்கி தோன்றும்.

கீழே மூன்று Sliderகள் உள்ளன. ஒவ்வொரு Slider ஆக நகர்த்தலாம். அல்லது அருகில் உள்ள கட்டத்தில் எண்களை பூர்த்தி செய்யலாம். அதற்கு தகுந்தவாறு எழுத்துக்களின் தோற்றம் மாறும்.

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

இங்கு Arc செலக்ட் செய்யப்பட்டுள்ளது.





Arc வடிவம் - Horizontal

இங்கு Arc Styleலில் Text, Horizontal மற்றும் Verticalலில் மாறி தோன்றுவதை காணலாம்.

Arc வடிவம் - Vertical

இங்கு கீழே சில Sample Styleகள் காட்டப்பட்டுள்ளன.




Fish வடிவம்

Flag வடிவம்

Arch வடிவம்

Shell upper வடிவம்

இவ்வாறு Styleகளை உருவாக்க Layerஐ Select செய்தால் போதுமானது. Textஐ Select செய்ய தேவை இல்லை. முதலில் தேவையான Styleஐ Select செய்யவும். அடுத்து Harizontal அல்லது Vertical பட்டன்களில் ஒன்றை Select செய்யவும். கடைசியாக கீழே உள்ள Sliderகளை நகர்த்தவும்.

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

Warp Text மூலம் எழுத்துக்களை கீழ்கண்டவாறு பல வடிவங்களில் தோன்ற செய்யலாம்.













Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

## Pen Tool: Shortcut Key - P ( 5 Tools)


இது மிகவும் பயனுள்ள ஒரு Tool. ஆனால் நல்ல பயிற்சி தேவை. ஆரம்பத்தில் கொஞ்சம் கடினமாக தோன்றும்.

இதில் 5 Toolகள் அடங்கும். அவற்றில் இரண்டிற்கு மட்டுமே Short Cut Keyகள் உள்ளன.

1) Pen Tool - P
2) Freeform Pen Tool - P
3) Add Anchor Paint Tool
4) Delete Anchor Paint Tool
5) Convert Paint Tool






### 1) Pen Tool: Shortcut Key - P (5 Tools)





முதலில் ஒரு Pen Toolஐ Select செய்யவும். பிறகு ஒரு இடத்தில் Click செய்யவும். ஒரு புள்ளி தோன்றும். இதை Anchor Point என்பர்.

அடுத்து கொஞ்சம் தூரத்தில் Click செய்யவும். இப்பொழுது முதல் புள்ளியில் இருந்து ஒரு கோடு இரண்டாவதாக கிளிக் செய்யப்பட்ட இடம் வரை வரும். இவ்வாறு மவுசை நகர்த்தி கிளிக் செய்துகொண்டே போனால் வரிசையாக கோடுகள் உருவாகும். தொடர்ச்சியாக கிளிக் செய்து தேவையான Shapeஐ மிக சுலபமாக வரையலாம். ஒரு உருவத்தை அல்லது மனிதனின் தலை போன்றவற்றை ஒரு Outline Drawing போல கச்சிதமாக வரையலாம்.










வரிசையாக Click செய்த பிறகு இவ்வாறு தோன்றும். Selection இன்னும் முடிவு பெறவில்லை.

Selection முடிந்த பிறகு இவ்வாறு தோன்றும்.

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.






முடிவு பெறாத Selection

வரைந்து முடிந்த பிறகு Move Tool மூலம் நகர்த்தினாலவ் அந்தப் பகுதி தனியாக நகரும். நனியாக துண்டாக உள்ள பகுதி Fore ground நிறத்தில் இருக்கும்.


இது முக்கியமாக ஒரு உருவத்தில் இருந்து Outline Drawing வரைய பயன்படுகிறது.

### 2) Freeform Pen Tool: Shortcut Key - P (5 Tools)




பேனாவினால் ஒரு உருவம் வரைவது போல வரையலாம். வளைவுகளையும் சுலபமாக வரையலாம்.

### 3) Add Anchor Point Tool: No Shortcut Key (5 Tools)




ஏற்கனவே வரையப்பட்ட படத்தை மாற்றி அமைக்கலாம். Pen Toolஐ பயன்படுத்தி வரையும் பொழுது அதில் அநேக Anchor Pointகள் அதாவது புள்ளிகள் தோன்றும். ஒரு புதிய Anchor Pointஐ உருவாக்கி ஏற்கனவே வரைந்ததை மாற்றி வரையலாம்.

### 4) Delete Anchor Point Tool: No Shortcut Key (5 Tools)



Shapeன் மீது உள்ள புள்ளிகளை Delete செய்யலாம். அதாவது தேவை இல்லாத Anchor Pointகளை நீக்கலாம்.

### 5) Convert Point Tool: No Shortcut Key (5 Tools)




Shapeன் கோணத்தை மாற்றி அமைக்கலாம். Altஐ Press செய்து புதியதாக வளைவுகளை அமைக்கலாம். கடைசியாக வரைந்த கோட்டை அழிக்க வேண்டுமானால் Backspace கீயை அழுத்தவும்.

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

**Shape Tool:** Shortcut Key - U ( 6 Tools)

இது ஒரு பொதுவான பெயர். இதில் 6 Toolகள் உள்ளன. இவை அனைத்திற்கும் உள்ள Shortcut Key - U. சதுரம், செவ்வகம், வட்டம் போன்ற பலவிதமான Shapeகளை உருவாக்கலாம்.




ஒரு Toolஐ செலக்ட் செய்து Drag செய்தால் அதற்குரிய Shape வந்துவிடும். தேவையான நிறங்களை Fill செய்யலாம்.

Option Barல் உள்ள Shape Layer ஐகான் செலக்ட் செய்யப்பட்டு இருக்க வேண்டும்.

Shape Layer ஐகான்

Shape Toolன் Option Bar





**1) Rectangle Tool:** Shortcut Key - U (6 Tool) - To Draw Rectangle Shape




Rectangle Shape செவ்வக வடிவில் ஒரு Shape வரைய.


**2) Rounded Rectangle Tool:** Shortcut Key - U (6 Tool)
To draw Rectangle with Curved Corners
நாக்கு மூலைகளிலும் வளைவுடன் ஒரு செவ்வகம் வரைய.




**3) Ellipse Tool:** Shortcut Key - U (6 Tool)
To Draw Circle Shape & Oval shape
வட்டம் மற்றும் நீளவாக்கில் படம் (Oval Shape) வரைய



**4) Polygon Tool:** Shortcut Key - U (6 Tool)
To Draw a Polygon Shape - Polygon வடிவில் கட்டங்கள் வரைய




**5) Line Tool:** Shortcut Key - U (6 Tool)
To draw a Line - ஒரு Line வரைய




Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

**6) Custom Shape Tool:** (Shortcut Key - U) (6 Tool)




To draw any Shape

விருப்பப்படி Shape வரைய. மேலும் Option Barல் ஏகப்பட்ட Shapeகள் உள்ளன. அவற்றை பயன்படுத்திக் கொள்ளலாம்.





Option Barல் Click செய்தால் கீழ்கண்ட விண்டோ தோன்றும்.

இவற்றில் தேவையானவைகளை Select செய்து பயன்படுத்தலாம்

















சில Shape வடிவங்கள்.

## Notes Tool:   Shortcut Key - N  (2 Tool)







Notes என்றால் குறிப்பு என்பது யாவரும் அறிந்ததே. ஒரு போட்டோவில் அநேகவிதமான மாற்றங்களை செய்து அழகுபடுத்துகிறோம். சில நேரங்களில் நாம் என்ன என்ன செய்தோம் என்பது நமக்கு ஞாபகத்தில் வைத்திருக்க இயலாது. எனவே நாம் செய்த வேலைகளை ஒரு குறிப்பாக எழுதி வைக்க இது உதவுகிறது.

மேலும் ஒரே போட்டோவில் அடுத்தவர் வேலையை தொடர வேண்டி இருந்தால் அதற்கான குறிப்பையும் இங்கு பூர்த்தி செய்யலாம். பைலை Open செய்ததும். இந்த Note Tool தோன்றும்.




## Audio Annotation Tool:   Shortcut Key - N (2 Tool)




மேலே கூறப்பட்ட அதே விவரங்களை Audio Voiceஆக Record செய்து வைக்க இது உதவுகிறது. இதற்கு Mic, Speaker இருக்க வேண்டும்.

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

## Eyedropper Tool: Shortcut Key - I (3 Tool)







ஒரு நிறத்தை துல்லியமாக Fill செய்ய இது உதவுகிறது.

இந்த Toolஐ செலக்ட் செய்து ஒரு படத்தில் உள்ள நிறத்தை Click செய்தால் Foregroundல் அந்த நிறம் Fill செய்யப்படும். அடுத்து தேவைப்படும் இடங்களில் அந்த நிறத்தை Fill செய்யலாம்.

Selection Tool மூலம் தேவைப்படும் பகுதியை செலக்ட் செய்து Fill மூலம் நிரப்பலாம். அல்லது Brush Tool மூலம் நிரப்பலாம்.

## 2) Color Sampler Tool: Shortcut Key - I (3 Tools)




ஒரு படத்தில் உள்ள நிறங்கள் RGB அல்லது CYMKஆல் உருவாக்கப்பட்டவை என்ற உண்மை யாவரும் அறிந்ததே. ஒவ்வொன்றிலும் எவ்வளவு சதவிகிதத்தில் உள்ளது என்பதை அறியலாம்.

அடுத்து நிறத்தை பூர்த்தி செய்ய வேண்டிய Selection Tool மூலம் Select செய்து Fill அல்லது Brush tool மூலம் Fill செய்யலாம். போட்டோக்களில் Touchup செய்யலாம்.


ஒரு போட்டோவில் நான்கு இடங்களில்தான் இதை உபயோகிக்கலாம். அதற்கு மேல் உபயோகிக்க இயலாது.






Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

**Hand Tool:** No Short Cut Key



ஒரு படத்தை பெரியதாக தோன்ற செய்த பிறகு முழு படத்தையும் பார்க்க இயலாது. சில பகுதிகளைத்தான் பார்க்க முடியும். Scroll செய்வது போல இந்த Toolஐ பயன்படுத்தி படத்தை விருப்பப்படி நகர்த்தி பார்க்கலாம்.

படம் பெரியதாக தோன்றச் செய்தால்தான் இதற்கு வேலை.

**Zoom Tool: Short Cut Keys - Ctrl + அல்லது Ctrl -**



ஒரு படத்தை பெரியதாக அல்லது சிறியதாக தோன்றச் செய்ய உதவுகிறது. இந்த Toolஐ செலக்ட் செய்து படத்தின் ஒரு இடத்தில் கிளிக் செய்தால் பெரியதாக தோன்றும்.

அதேபோல Altஐ Press செய்து கிளிக் செய்தால் சிறியதாகவும் தோன்றும். இதன் பயன்பாடு மிக மிக அதிகம். Altஐ Press செய்ததும் லென்ஸில் Minus (-) குறி தோன்றும்

இதே செயலை Shortcut கீகள் மூலம் செய்யலாம்.

**Ctrl +** பெரியதாக தோன்றச் செய்தல்

**Ctrl -** சிறியதாக தோன்றச் செய்தல்

படத்தை பெரியதாக தோன்றச் செய்து மிகவும் துல்லியமாக வேலைகளைச் செய்யலாம்.

இதே செயலை மவுசில் உள்ள Scroll சக்கரம் மூலமாகவும் செய்யலாம். Alt கீயை அழுத்தியவாறு முன்பக்கம் Mouse Wheelஐ உருட்டினால் சிறியதாக மாறும். சக்கரத்ததை பின்பக்கம் உருட்டினால் பெரியதாக மாறும்.




சாதாரணமாக தோன்றும் படம்




பெரியதாக தோன்றச் செய்த பிறகு இவ்வாறு தோன்றும்

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

## Foreground Colour/Background Colour:



இங்கு இரண்டு கட்டங்கள் உள்ளன. முன் பக்த்தில் உள்ள கட்டம் Foreground எனப்படும். பின் பக்கத்தில் உள்ள கட்டம் Background எனப்படும். எப்பொழுதும் இவைகள் Black & Whiteல் இருக்க வேண்டும்.


அதாவது Foreground - Black நிறம்.


Background - White நிறம்

Set Background Tool

Set Foreground Tool

இவற்றின் நிறங்களை நமது விருப்பப்படி மாற்றிக் கொள்ளலாம். Foreground நிறத்தை மாற்ற அந்தக் கட்டத்தின் மீது கிளிக் செய்தால் கீழ்க்கண்ட ஒரு Colour Picker விண்டோ தோன்றும். இதன் மூலம் தேவையான நிறத்தை Fill செய்யலாம். இதே செயல்முறையில் Background நிறத்தையும் மாற்றலாம்.



Swap Arrow

இந்த இரண்டு கட்டங்களுக்கும் மேல்புறம் வலது பக்கத்தில் ஒரு வடிவத்தில் இரண்டு பக்கமும் Arrow உடன் உள்ளது. இதை Arrow Swap என்பர். இதை கிளிக் செய்தால் Background Colour, Foregroundற்கும் Foreground Colour, Backgroundற்கும் மாறிவிடும். இவ்வாறு ஒன்றுக்கொன்று மாற்றிக் கொள்வதை Swap என்பர். Select செய்யப்பட்ட ஒரு குறிப்பிட்ட பகுதியில் Background அல்லது Foreground கலரை கீழ்க்கண்டவாறு செய்தும் நிறப்பலாம்.

**Foreground கலரை நிறப்ப:** Alt + Backspace or Alt + Del Key

**Background கலரை நிறப்ப:** Ctrl + Backspace or Ctrl + Del Key

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

## Edit Standard Mode:


சாதாரணமாக எல்லா வேலைகளும் இந்த Modeல் தான் செய்யப்படுகிறது.






## Full Screen Mode with Menu Bar:


Menu Bar, Toll Box மட்டும் தோன்றும். Title Bar, Image Bar, Status Bar தெரியாது. இதில் வேலை செய்வது கொஞ்சம் கடினமானது.






Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

## Quick Mask Mode:



இது அதிக பயன்பர்ட்டில் இல்லை. சாதாரணமாக இந்த Mask Modeல் அதிக மாற்றங்கள் செய்ய இயலாது.


## Full Screen Mode with Menu Bar:




Menu Bar, Toll Box மட்டும் தோன்றும்.

Title Bar, Image Bar, Status Bar தெரியாது. இதில் வேலை செய்வது கொஞ்சம் கடினமானது.

## Full Screen Mode:



ஒரு படம் திரை முழுவதிலும் தோன்றும். Tool Box தவிற எந்த மெனுக்களும் தெரியாது. Shortcut கீகளை வைத்துதான் வேலை செய்ய வேண்டும். இதில் வேலை செய்வது கடினமான ஒன்று. ஆனால் Shortcut கீகளில் நல்ல தேர்ச்சி பெற்றவர்கள் வேலை செய்யலாம்.



C:\Program Files\Adobe\Photoshop 7.0\Samples

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

## Cut and Paste, Copy and Paste

Cut & Paste மற்றும் Copy & Paste ஆகிய இரண்டும் அனைவருக்கும் தெரிந்ததே.

**Cut & Paste:** ஒரு இடத்தில் உள்ள தேவையான பகுதியை Cut செய்து வேறு ஒரு இடத்தில் Paste செய்தால், Cut செய்யப்பட்ட பகுதியில் இருக்காது.

**Copy & Paste:** மேலே கூறிய அதே செயல்தான். ஆனால் இங்கு Copy செய்த இடத்தில் அந்தப் பகுதி இருக்கும். அதாவது இரண்டு இடத்திலும் இருக்கும். Copy செய்த இடத்திலும் இருக்கும். Paste செய்யப்பட்ட இடத்திலும் இருக்கும். இந்த செயல்களை மெனுக்கள் மூலமாகவும் செய்யலாம். Shortcut கீகள் மூலமாகவும் செய்யலாம்.

முதலில் தேவையான பகுதியை Select செய்து கொள்ள வேண்டும். வசதிக்கு தகுந்தவாறு ஏதாவது ஒரு Selection Toolஐ பயன்படுத்தலாம்.

Selection செய்த பிறகு மெனு மூலமாக Copy அல்லது Cut செய்யலாம்.

**மெனு மூலம் செய்தல்:**

Edit → Copy அல்லது Edit → Cut

**Shortcut Key மூலம் செய்தல்:**

Ctrl + C - Copy செய்ய

Ctrl + X - Cut செய்ய

அடுத்து வேறு இடத்தில் Paste செய்ய வேண்டும். அடுத்த பைலை Open செய்யவும்.

**மெனு மூலம் Paste செய்ய:**

Edit → Paste

**Shortcut Key மூலம் Paste செய்ய:**

Ctrl + V

ஒரு குறிப்பிட்ட பகுதியை மட்டும். Copy செய்யலாம் அல்லது ஒரு உருவத்தை மட்டும் Copy செய்யலாம்.

உதாரணத்திற்கு ஒரு மனிதனின் உருவத்தை மட்டும் Copy செய்யலாம் அல்லது ஒரு கட்டிடத்தை மனிதனின் உருவத்துடன் சேர்த்து Copy செய்யலாம்.

Copy செய்வதற்கு முன்பாக Select செய்து கொள்ள வேண்டும். மேலும் Selection செய்ய அநேக Toolகள் உள்ளன. அவற்றில் பொருத்தமான Toolஐ பயன்படுத்த வேண்டும்.

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

# Layer Styles

இது Layer மெனுவில் உள்ளது. **Layer → Layer Style**

இதன் Sub Menuவில் சுமார் 10 மெனுக்கள் உள்ளன. இவற்றை பயன்படுத்தி Special Effectகளை உருவாக்கலாம். இப்பொழுது Sub Menuக்களைப் பற்றி பார்ப்போம்.





ஒரு Text அல்லது படத்திற்கு நிழல்களை தோன்றச் செய்யலாம். இந்த மெனுக்களை துல்லியமாக செயல்படுத்த கீழே காணப்படும் Layer Style விண்டோ பயன்படுத்தப்படுகிறது. இந்த விண்டோவின் இடது புறத்தில் எல்லா மெனுக்களையும் பார்க்கலாம். தேவையான மெனுவின் Check Boxல் Click செய்து அந்த மெனுவை Double கிளிக் செய்தால் அதற்கான Optionகள் தோன்றும். அவற்றில் தேவையான மாற்றங்களை செய்ய வேண்டும்.

ஒரு மெனுவின் எல்லா Effectகளும் Layer முழுவதற்கும் Apply ஆகிவிடும். அதாவது Layer பூராவிலும் Effectன் மாற்றம் காணப்படும்.

## 1) Drop Shadow மெனு:

ஒரு Layerல் ஒன்றுக்கு மேற்பட்ட Effectகளை புகுத்தலாம். இந்த மெனுவின் Check Boxல் டிக் அடித்து மெனுவை Double Click செய்யவும். உடனே அதற்குரிய கீழ்க்கண்டவாறு விண்டோ தோன்றும்.




இங்கு Drop Shadow Select செய்யப்பட்டு உள்ளது. அதற்கு உரிய Effectகள் வலதுபுறத்தில் உள்ளன. தேவையான Shadow Effect கிடைக்க எண்களை கூட்டியோ அல்லது குறைத்தோ செய்யலாம்.

இங்கு மொத்தம் 5 Sliderகள் உள்ளன. அவைகளை நகர்த்தி உடனுக்குடன் மாற்றங்களை காணலாம்.

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

கீழ்க்கண்டவைகள் எல்லா மெனுவிற்கும் பொதுவானது.

1) Blend Mode
2) Opacity
3) Angle
4) Contour

**Blend Mode:** இங்கு Normal என்பதை Select செய்யவும்.

**Opacity:** கண்ணாடித்தன்மையை (Transparent) கூட்டவோ குறைக்கவோ பயன்படும்.

**இடதுபுறம் உள்ள கீழ்க்கண்ட மெனுக்களின் பயன்பாடுகள்:**

**Inner Shadow:** நிழல்களை உட்பக்கமாக தோன்றச் செய்யலாம்.


**Outer Glow:** படத்தை சுற்றி பிரகாசமாக ஒரு வெளிச்சத்தை தோன்றச் செய்யலாம்.

**Inner Glow:** படத்தின் உட்பக்கம் பிரகாசமாக தோன்றச் செய்யலாம். இதை ஏதாவது ஒரு நிறத்தில் செய்யலாம். Textகளை பிரகாசமான நிறத்தில் செயல்பாட்டை பார்ப்போம்.


முதலில் கீழ்க்கண்டவாறு ஒரு பெயரை அடிக்கவும்.




அடுத்து கீழ்க்கண்ட விண்டோவில் Inner Glow என்பதை Select செய்து Double Click செய்யவும்.




Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.




Inner Glow effect கொடுத்த பிறகு தோன்றும் காட்சி


**Bevel and Embose மெனு: - 3D Effects**

இது அதிக அளவில் அடிக்கடி பயன்படுத்தக்கூடிய ஒரு மெனு. படம் மற்றும் Textகளை 3 D Effect வடிவத்தில் தோன்றச் செய்ய இது உதவுகிறது.

Layer Style விண்டோவில் இந்த மெனுவின் Check Boxல் Click செய்த உடன் Style என்ற இடத்தில் ஒரு Combo Box தோன்றும். அதில் கீழ்க்கண்ட 5 effectகளை காணலாம்.

**5 Types of Effects**

1) Outer Bevel
2) Inner Bevel
3) Embose
4) Pillow Embose
5) Stroke Embose




தேவையான மாற்றங்களை செய்து Previewல் உடனுக்குடன் பார்க்கலாம்.

**Satin மெனு:** (To Draw like Line design)

படம் அல்லது Textகளின் மீது பலவிதமான கோடுகள் போன்று ஒரு Designஐ உருவாக்குதல்.

பல விதமான கோடுகள்

1) நேர்க் கோடுகள்

2) குறுக்குக் கோடுகள்


3) வளைவான கோடுகள்

4) மேல் இருந்து கீழ்

5) பக்க வாட்ட கோடுகள்

GK

Layer Style விண்டோவில் இதற்கான Check Boxல் கிளிக் செய்த உடன் Contour என ஒரு அயிட்டம் தோன்றும். இதில் பலவிதமான கோடுகளை காணலாம். தேவையானதை தேர்வு செய்து பயன்படுத்தலாம். இங்கு Slideகளை நகர்த்தி Satin Effectகளை கொடுக்கலாம்.




Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

**Colour Overlay:** (Colour Filling)

இந்த Effect ஒரு புதிய குறிப்பிட்ட நிறத்தை உருவாக்க பயன்படுகிறது.


1) படம் முழுவதும் நிறத்தை மாற்றலாம்.

2) Selection பகுதியை மட்டும் மாற்றலாம்.

இந்த மெனுவின் Check Boxல் கிளிக் செய்ததும் இரண்டு Options தோன்றும்.

அதில் தேவையானதை தேர்வு செய்யலாம். பிறகு Opacityல் எண்களை கூட்டி அல்லது குறைத்து தேவையான Effectஐ உருவாக்க வேண்டும்.

Blend Modeல் Normal என்பதை Select செய்யவும். மேலும் தேவையான Colourஐ Select செய்யலாம்.





Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

**Gradient Overlay மெனு:** To bring Gradient in Text & Picture

Gradient Effectகளை Text அல்லது படத்தில் கொண்டு வரலாம்.

Opacityஐ குறைக்கலாம் Adjust செய்து மாற்றத்தை படம் அல்லது Textல் காணலாம். Blend Modeல் உள்ள Optionகளை Select செய்து அநேக Effectகளை உருவாக்கலாம்.




Pull Down Menu click செய்து தேவையான Gradient டிசைனை Select செய்யலாம்

Pull Down Menu click செய்து தேவையான டிசைனை Select செய்யலாம்


**LAPTOP SERVICING**

**தமிழ்**


**3 DVDகள் இலவசம்**

Laptopஐ மிகவும் சுலபமாக தனித்தனியாக பிரித்து திரும்ப Assemble செய்யலாம். Hard Disk, DVD Writer, RAM, LCD Screen போன்றவற்றை சுலபமாக மாற்றிப் பொருத்தலாம். Corrept ஆன OSஐ அத்துடன் உள்ள Softwareகளுடன் சுலபமாக பழைய நிலைக்கே கொண்டு வந்துவிடலாம்.

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

**Pattern Overlay:** - To Merge Pattern with Picture

அநேக விதமான Pattern Effectகளை படத்துடன் Merge செய்ய இது உதவுகிறது. இங்கு Pattern என்ற இடத்தில் உள்ள Pull Downஐ Click செய்தால் அனேக Patternகளை காணலாம்.




Pull Downஐ Click செய்ததும் தோன்றும் விண்டோ.

இங்கு தேவையான ஒரு Patternஐ Select செய்ய வேண்டும். உடனே Select செய்யப்பட்ட Pattern மேலே Patternஎன்ற கட்டத்தில் தோன்றும்.

அடுத்த OKஐ Click செய்யவும்.

GK

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

**Stroke:** (To Draw Outline) Use Stroke Emboss from Bevel Effects


இந்த Effect படம் அல்லது Textற்கு ஒரு Outlineஐ உருவாக்க உதவுகிறது.

அந்த Outlineன் நிறத்தை மாற்றலாம். அந்த Outlineன் அளவை மாற்றலாம்.

அதாவது தடிமனாகவோ, மெல்லியதாகவோ தோன்றச் செய்யலாம்.

முதலில் Stroke Effectஐ கொடுக்க வேண்டும். ஒரு Outline தோன்றும்.

அடுத்து Bevel Effectகளை கொடுக்க வேண்டும். அதற்கு Bevel Effectல் உள்ள Stroke Embose மெனுவை பயன்படுத்த வேண்டும்.




Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

## **Free Transform மெனு:** Shortcut Key Ctrl+T

Edit → Free Transform

இது Edit மெனுவின் கீழ் உள்ளது. ஒரு Layerல் உள்ள படத்தை பெரியதாகவோ அல்லது சிறியதாகவோ மாற்ற இது உதவுகிறது. Layerஐ செலக்ட் செய்து இதை கிளிக் செய்ததும் Layerல் உள்ள படத்தை சுற்றி ஒரு கட்டம் தோன்றும். அதை Drag செய்து பெரியதாகவோ அல்லது சிறியதாகவோ மாற்றலாம். படத்தின் sizeஐ மாற்றிய உடனே Enterஐ அழுத்த வேண்டும் அல்லது Double Clik செய்ய வேண்டும்.



Original Picture



சிறியதாக மாற்றப்பட்ட படம்

இவ்வாறு sizeஐ மாற்றிய உடனே Enterஐ அழுத்த வேண்டும்



பெரியதாக மாற்றப்பட்ட படம்

இவ்வாறு sizeஐ மாற்றிய உடனே Enterஐ அழுத்த வேண்டும்


Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

## Transform மெனு

இது Edit மெனுவின் கீழ் உள்ளது.

Edit → Transform

இதன் கீழ் அநேக மெனுக்கள் உள்ளன. ஒரு படத்தை பலவிதமாக தோன்றச் செய்ய இந்த மெனுக்கள் பயன்படுகின்றன.




1) **Scale:** படத்தின் அளவை மாற்றலாம். அதாவது resize செய்யலாம்.

Edit → Transform → Scale





Scale

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

**2) Rotate:** படத்தை தேவையான கோணத்தில் Rotate செய்யலாம்.


Edit → Transform → Rotate

**Rotate:**



**3) Skew:** படத்தை வலது அல்லது இடதுபக்கம் சாய்வாக தோன்றச் செய்யலாம்.

Edit → Transform → Skew



**Skew:**

**4) Distort:** படத்தின் நான்கு முனைகளை வெவ்வேறு கோணங்களில் மாற்றலாம்.

Edit → Transform → Distort



**Distort**

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

**5) Perspective:** படத்தை கோபுரம் போல தோன்றச் செய்யலாம்.


Edit → Transform → Perspective



**Perspective**

**6) Rotate 180°:** படத்தினை தலைகீழாக தோன்றச் செய்யலாம்.

Edit → Transform → Rotate180



**Rotate 180⁰**

**7) Rotate 90°:** படத்தினை செங்குத்ததாக பக்கவாட்டில் திருப்பி தோன்றச் செய்யலாம். அதாவது Clockwise திசையில் திருப்புதல். படத்தின் அடிபாகத்தை இடதுபுறத்தில் தோன்றச் செய்யலாம்.



Rotate 90⁰

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.


**8) Flip Horizontal:** படத்தை பக்கவாட்டில் திருப்பலாம்.

படத்தின் அடிபாகத்தை வலது பக்கத்தில் தோன்றச் செய்யலாம்.



Flip Horizontal

**9) Rotate 90CCW:** பக்கவாட்டில் Anticlockwiseல் திருப்பி செங்குத்தாக தோன்றச் செய்யலாம். படத்தின் அடிபாகம் வலதுபக்கத்தில் தோன்றும்.



**10) Flip Vertical:** படத்தை தலைகீழாக மாற்றலாம்.



Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

## Define Pattern மெனு:

இது Edit மெனுவின் கீழ் உள்ளது.

Edit → Define Pattern

முழு படத்தையோ அல்லது படத்தின் ஒரு குறிப்பிட்ட பகுதியையோ ஒரே பக்கத்தில் வரிசையாக குறுக்கு மற்றும் நெடுக்குமாக அடுக்கி வைக்க இது பயன்படும்.

தபால் ஸ்டாம்புகள் ஒரே தாளில் வரிசையாக உள்ளது போல செய்யலாம்.

முதலில் ஒரு படத்தை Open செய்யவும்.



அடுத்து Edit மெனுவில் உள்ள Define Pattern என்பதை டபுள் கிளிக் செய்யவும். கீழ்க்கண்ட விண்டோ தோன்றும்.

Edit → Define Pattern




இங்கு Pattern Name என்ற இடத்தில் ஒரு பெயரை பூர்த்தி செய்ய வேண்டும். எனவே Eagle.psd என பூர்ததி செய்து Okஐ கிளிக் செய்யவும்.


இப்பொழுது Eagle psd என்ற பெயரில் ஒரு புதிய Patternஐ உருவாக்கிவிட்டோம்.

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.


அடுத்து ஒரு பதிய பைலை Open செய்யவும்.

Edit மெனுவில் உள்ள Fill மெனுவை டபுள் கிளிக் செய்யவும்.

கீழ்க்கண்ட விண்டோ தோன்றும்.




Use என்ற இடத்தில் Pattern என்பதை Select செய்யவும்.




இந்த படத்ததை Select செய்யவும்

அடுத்து Custom Pattern என்பதை கிளிக் செய்து நாம் சேமித்து வைத்த பைலின் படத்ததை Select செய்து Okஐ கிளிக் செய்யவும்.

வேலை முடிந்துவிட்டது. இப்பொழுது அடுத்த பக்கத்தில் உள்ளவாறு படங்கள் வரிசையாக அடுக்கப்பட்டு இருப்பதை காணலாம்.

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.



இங்கு ஒரே பக்கத்தில் படங்கள் வரிசையாக அடுக்கப்பட்டு உள்ளன.


## VIDEO EDITING Book

**Video Editing Book with Free 3 DVDs**

இந்த புத்தகத்துடன் 3 DVDs4 இலவசமாக கொடுக்கப்படுகிறது.
Professional Camera மற்றும் Handy Camகளில் எடுக்கப்படும் வீடியோக்களை
மிகவும் சுலபமாக Edit செய்து ஒரு சிறந்த வீடியோவை தயாரிக்கலாம்.
வீடியோவில் தேவையான பாடல்களை சேர்க்கலாம்.
இயற்கை காட்சிகளை சேர்க்கலாம்
Hollywood Effectகளை சேர்க்கலாம்.
அழகான Titleகளை சேர்க்கலாம்.
புதுமாதிரியான Transitions எனப்படும் Effectகளை சேர்க்கலாம்
மேலும் Capture Card, Firewire Card ஆகியவற்றின் விவரங்களை தெரிந்து
கொண்டு சிறப்பாக செயல்படலாம். அனைத்து Hardware சம்பந்தமான
தொழில் நுணுக்கங்களை பெறலாம்.


Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

## Colour Handling அல்லது Color Corrections

போட்டோக்களில் ஏற்கனவே உள்ள நிறங்களை மாற்ற வேண்டிவரும். மேலும் சில போட்டோக்களில் புதிய கலர்களை நிறப்ப வேண்டிவரும். சாதாரணமாக Scan செய்து எடுக்கப்படும் போட்டோக்களின் நிறங்கள் சற்று மங்கலாகவே இருக்கும். இவ்வாறு நிறங்களில் உள்ள பிரச்சினைகளை மிகவும் சுலபமாக சரி செய்துவிடலாம்.

நிறங்களை கையாள இரண்டு வழிகள் உள்ளன. அதாவது இரண்டு மெனுக்கள் உள்ளன.


1) Adjustments Menu

2) New Adjustments Layer Menu

### 1) Adjustments மெனு:

Image → Adjustments

இது Imageவின் கீழ் உள்ளது. இதன் கீழ் அநேக மெனுக்கள் உள்ளன. அதாவது 21 மெனுக்கள் உள்ளன. எல்லாமே நிறங்களை கையாளுவதற்காக உள்ளவைகள். இவைகள் மூலம் படங்களில் தேவையான மாற்றங்களை செய்துவிடலாம்.





Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

## 2) New Adjustments Layer Menu

Layer → New Adjustments Layer

இது Layer Menuவின் கீழ் உள்ளது. இதன் கீழும் அநேக மெனுக்கள் உள்ளன. Adjustments Menuவின் கீழ் உள்ள அதே மெனுக்கள் இங்கும் உள்ளன.

இவைகளும் அதே செயல்களைத்தான் செய்யும். அதாவது எல்லாமே நிறங்களை கையாளுவதற்காக உள்ளவைகள். இவைகள் மூலமும் படங்களில் தேவையான மாற்றங்களை செய்யலாம்.




இப்பொழுது நாம் Adjustmentsவின் கீழ் உள்ள மெனுக்களை பற்றி பார்ப்போம்.

### Levels மெனு : Ctrl+L

Image → Adjustments → Levels

இங்கு Channel என்ற இடத்தில் உள்ள இரண்டில் ஒன்றை Select செய்யலாம்.

RGB அல்லது CYMK


RGBஐ செலக்ட் செய்தால் தனித்தனியாக மூன்று நிறங்களில் (Red, Green, Blue) தேவையான எண்களை பூர்த்தி செய்து நிறத்தை மாற்றலாம்.

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.


அதே போல் CYMKஐ செலக்ட் செய்தால் தனித்தனியான நான்கு நிறங்களிலும் (Cyan, Yellow, Megenta, Black) தேவையான எண்களை பூர்த்தி செய்து நிறத்தை மாற்றலாம்.

மேலும் Sliderகளை நகர்த்தியும் தேவையான நிறங்களை கொண்டு வரலாம்.

மாற்றங்களை செய்து உடனுக்குடன் வித்தியாசத்தை பார்க்கலாம்.




மாற்றுவதற்கு முன்பு




**Auto Levels மெனு:** Shift + Ctrl + L

Image → Adjustments → Auto Levels

இதை Auto Correction எனவும் கூறலாம். அதாவது போட்டோவில் தேவைப்படும் நிறங்கள் தானாகவே மாற்றப்பட்டுவிடும்.

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

## Auto Contrast மெனு:

Image → Adjustments → Auto Contrast

சில போட்டோக்களில் Contrastன் அளவு மிகவும் அதிகமாக அதாவது தேவைக்கு மேல் காணப்படும். அவ்வாறு இருப்பதை தானாகவே சரியான Contrastற்கு கொண்டு வந்துவிடும்.

## Auto Colour மெனு:


Image → Adjustments → Auto Color

சில போட்டோக்களில் நிறங்கள் தேவை இல்லாமல் அதிகப்படியாக இருக்கும். அவ்வாறு இருப்பதை தேவைப்படும் அளவிற்கு வேண்டிய நிறத்தினை தானாகவே பூர்த்தி செய்துவிடும்.

## Curves மெனு: Ctrl + M

Image → Adjustments → Curves

Curvesஐ கிளிக் செய்ததும் கீழ்க்கண்ட விண்டோ தோன்றும். முதலில் விண்டோவில் உள்ள Graph கட்டங்களில் புள்ளிகளை உருவாக்க வேண்டும். Ctrl கீயை அழுத்தியவாறு படத்தில் மாற்றங்கள் தேவைப்படும் நிறத்தில் கிளிக் செய்தால் புள்ளிகள் உருவாகும். பிறகு அந்த புள்ளிகளை நகர்த்தி Curveஐ உருவாக்கவும். Curveஐ Adjust செய்வதன் மூலம் தேவையான நிறங்களை கொண்டு வரலாம். Curveஐ Adjust செய்யும் பொழுதே நிறம் மாறுவதை காணலாம்.




Channel என்ற இடத்தில் RGB அல்லது Red, Green, Blue ஆகியவற்றில் எதை வேண்டுமானாலும் தனித்தனியாக Select செய்து நிறங்களை மாற்றலாம்.

## Save பட்டன்

இந்த விண்டோவின் வலது பக்கத்தில் Save பட்டன் உள்ளது.

அநேக போட்டோக்களுக்கு ஒரே Setting தேவைப்பட்டால் இந்த Save பட்டனை கிளிக் செய்து Save செய்து வேண்டும்போது பயன்படுத்தலாம்.

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

## Load பட்டன்

இந்த விண்டோவின் வலது பக்கத்தில் Load பட்டன் உள்ளது. இந்த Load பட்டனை கிளிக் செய்து ஏற்கனவே Save செய்து வைத்த Settingகளை பயன்படுத்தலாம்.


## Colour Balance மெனு: Ctrl + B

Image → Adjustments → Colour Balance

நிறங்களை சமமாக தோன்றச் செய்யலாம். இதற்கு கீழ்க்கண்ட நிறங்களில் தனித்தனியாக மாற்றங்கள் செய்யலாம். அதாவது நிறங்களை குறைக்கலாம் அல்லது கூட்டலாம்.

1) Red, Green, Blue

2) Cyan, Magenta, Yellow




இங்கு Color Levels என்ற கட்டங்களில் எண்களை பூர்த்தி செய்யலாம் அல்லது கீழ் உள்ள Sliderகளை இரண்டு பக்கமும் நகர்த்தலாம்.


## Brightness/Contrast மெனு:

Image → Adjustments → Brightness/Contrast

போட்டோக்களை படம் பிடிக்கும்பொழுது சில நேரங்களில் தவறுகள் ஏற்படலாம். சில போட்டோக்களில் தேவைக்கு அதிகமாக Brightness அதாவது பிரகாசமாக இருக்கலாம். அதே போல் மங்கலாகவும் இருக்கலாம். இவற்றை மிகவும் சுலபமாக சரி செய்ய இது உதவுகிறது.

அதாவது Over Brightness அல்லது Over Darknessஐ Adjust செய்யலாம்.

Contrastன் எண்ணை -100 என மாற்றினால் படம் முழுவதும் வெள்ளையாக தோன்றும்.





Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

## **Hue/Satuaration மெனு:** Ctrl + U

Image → Adjustments → Hue/Satuaration

ஒரு கலர் போட்டோவில் உள்ள ஒரு நிறத்தை மாற்ற உதவுகிறது.




இங்கு Hueவில் உள்ள Sliderஐ நகர்த்தினால் உடனே நிறம் மாறுவதை காணலாம்.

## **Desaturate மெனு:** Shift + Ctrl + U (To Make Black & White)

Image → Adjustments → Desaturate

ஒரு கலர் படத்தை Grayscale Modeற்கு மாற்ற பயன்படுகிறது. Gray Scale என்றால் கருப்பு வெள்ளை என்று பொருள். ஒரு கலர் போட்டோவை Grayscaleலில் மாற்ற வேண்டும் என்றால் கருப்பு வெள்ளை (Black & White) படமாக மாற்ற வேண்டும் என்று பொருள். ஒரு குறிப்பிட்ட Layerல் உள்ள படம் மட்டும் Black & White ஆக மாற்ற (Greyscale) இது உதவுகிறது.

இதே செயலை வேறு விதமாகவும் செய்யலாம்.


Image → Mode → Grayscale

கலர் போட்டோவை Black & White ஆக மாற்றலாம். ஆனால் இந்த போட்டோவில் வரையப்படும் அனைத்தும் கருப்பாகவே தோன்றும்.

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

## Replace Color மெனு:

Image → Adjustments → Replace Color




ஒரு படத்தில் குறிப்பிட்ட இடத்தில் உள்ள ஒரு நிறத்தை மாற்றி விருப்பமான நிறத்தை Fill செய்யலாம். முதலில் நிறம் மாற்ற வேண்டிய இடத்தை Select செய்யவும்.

அடுத்து இந்த விண்டோவில் உள்ள Eye Dropperஐ செலக்ட் செய்து நிறம் மாற்ற வேண்டிய இடத்தில் கிளிக் செய்யவும்.

அடுத்து Fuzzinessல் உள்ள Sliderஐ தேவையான அளவிற்கு நகர்த்தவும்.

அடுத்து கீழே Transformல் உள்ள மூன்று Sliderகளை நகர்த்தி நிறங்களை மாற்றலாம்.

Hue, Saturation, Lightnessல் உள்ள Sliderகளை Adjust செய்தால் நிறங்கள் மாறுவதை காணலாம்.

GK

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

## Selective Colour Menu:


Image → Adjustment → Selective Colour

சாதாரணமாக கீழ்க்கண்ட நிறங்கள் ஒரு படத்தில் உள்ளன.

1) Cyan
2) Magenta
3) Yellow
4) Black
5) Red
6) Green
7) Blue

இவைகள் தவிர Whiteம் உள்ளது.

இந்த நிறங்களை தனித்தனியாக செலக்ட் செய்து அதற்கு பதில் வேறு ஒரு நிறத்தினை மாற்றலாம். அதாவது ஒரு படத்தில் உள்ள Red நிறத்தை மட்டும் மாற்றி அதற்கு பதிலாக ஒரு Magenta நிறத்தை கொண்டு வரலாம்.




## Channel Mixer மெனு:

Image → Adjustments → Channel Mixer

CMYK Modeல் இருக்கும் பொழுது ஒவ்வொரு நிறத்திற்கான Channelகளில் தனித்தனியாக மாற்றங்கள் செய்து புதிய நிறத்தினை உருவாக்கலாம்.

கீழ்க்கண்ட சில சிறப்பு அம்சங்கள் கொண்ட படங்களை உருவாக்கலாம்.


1) Tinted Images
2) Grayscale
3) Sepia Tone

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

## Gradient Map மெனு:

Image → Adjustments → Gradient Map

ஏற்கனவெ உள்ள Gradient நிறத்தை மாற்றி புதியDesignஐ உருவாக்கலாம்.




## Invert மெனு:

Image → Adjustments → Invert

நிறங்கள் அநேக Pixelகளால் (புள்ளிகள்) உருவாகிறது என்பது தெரியும். ஒவ்வொரு PIxel நிறத்தையும் அதற்கு எதிர் நிறத்திற்கு மாற்ற இது உதவுகிறது. அதாவது ஒரு போட்டோவின் Negative போல தோன்றும்.



Original Image



After Invert

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

## Equalise மெனு:


Image → Adjustments → Equalise

வேறுபாடு உள்ள நிறங்களை சமமாக தோன்றச் செய்ய உதவுகிறது. சில Scan செய்த படங்கள் Darkஆக இருந்தால் சரியான நிறத்திற்கு கொண்டு வரலாம்.

## Threshold மெனு:

Image → Adjustments → Threshold

வண்ண போட்டோக்கள் மற்றும் கலர் படங்களை Black & white படங்களாக மாற்ற இது உதவுகிறது. அதாவது Indian Inkல் வரைந்த படம் போல தோன்றும்.




Threshold Levels என்ற இடத்தில் எண்களை கூட்டியோ குறைத்தோ மாற்றங்கள் செய்யலாம். அல்லது கீழ் பாகத்தில் உள்ள Sliderஐ நகர்த்தியும் Adjust செய்யலாம்.



Original Photo



After correction

## Postorize மெனு:

Image → Adjustments → Postorize


புதிய சிறப்பான Backgroundஐ நிறப்ப உதவுகிறது. அதாவது Blackgroundற்கு Special Effectகளை கொடுக்கலாம்.

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

## Variations மெனு:

Image → Adjustments → Variations

கீழ்க்கண்ட நிறங்களில் ஒவ்வொன்றிலும் தனித்தனியாக Select செய்து வேண்டிய இடத்தில் நிறத்தில் மாற்றங்கள் செய்யலாம்.




Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.


# Menu Bar




மெனு Barல் உள்ள மெனுக்களை பற்றி பார்ப்போம். மெனு Barல் மொத்தம் ஒன்பது மெனுக்கள் உள்ளன. இவைகள் தலைப்புகள். இவற்றின் கீழ் அனேக மெனுக்கள் உள்ளன. இப்பொழுது அவற்றின் பயன்பாட்டை பார்ப்போம்.

## File Menu:

மெனு Barல் உள்ள முதலாவது மெனு. இதன் கீழ் அநேக மெனுக்கள் உள்ளன.




**New மெனு:** Ctrl + N:

File → New

ஒரு புதிய பைலை Open செய்ய இது உதவுகிறது.

இதை கிளிக் செய்த உடன் ஒரு விண்டோ தோன்றும்.

.

அந்த விண்டோவில் தேவையான விவரங்களை பூர்த்தி செய்து OKஐ Click செய்ய வேண்டும்.

உடனே ஒரு புதிய பைல் Open ஆகிவிடும்.

இது விவரம் தனியாக ஆரம்பத்திலேயே விவரிக்கப்பட்டுள்ளது.

Open மெனு : Ctrl + O

File → Open

ஏற்கனவே கம்ப்யூட்டரில் Save செய்து வைக்கப்பட்டுள்ள பைல்களை Open செய்ய இது உதவுகிறது. PSD பைல் தவிர அதாவது போட்டோஷாப் பைல் தவிர கீழ்க்கண்ட பைல்களையும் Open செய்யலாம்.

Jpeg. bmp, Tiff

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

## Browse மெனு: Shift + Ctrl + O

File → Browse...

இதன் மூலம் தேவையான Folderஐ தேடி கண்டுபிடித்து Open செய்தால் அந்த Folderல் உள்ள பைல்கள் படங்களுடன் கட்டம் கட்டமாக தோன்றும். படத்தை பார்த்து தேவையான பைலை செலக்ட் செய்ய எளிதாக இருக்கும். கீழ்ப்பாகத்தில் Folderல் மொத்தம் எத்தனை பைல்கள் உள்ளன என்பதை காண்பிக்கும். மேலும் கீழ்க்கண்ட விவரங்களையும் காணலாம்.

1) Name
2) Crated on
3) Modified on
4) File type (PSD, JPEG, TIFF, BMP)
5) Width, Height
6) DPI, Colour Mode
7) File size

Digital Camera மூலம் எடுக்கப்பட்ட போட்டோக்களாக இருந்தால் கீழ்க்கண்ட விவரங்களையும் காணலாம்.

1) Appreture
2) Shutter Speed
3) Common Model
4) Date & Time
5) Flash On / Off

## Open As மெனு: Short Cut Key - Alt + Ctrl + O

எல்லா போட்டோஷாப் பைல்களையும் Open செய்ய உதவுகிறது..

## Open Recent மெனு:

கடைசியாக பயன்படுத்தப்பட்ட பைல்கள் இதில் தோன்றும். Preference setting என்ற இடத்தில் எவ்வளவு பைல்கள் வரை காண்பிக்க வேண்டும் என்பதை பூர்த்தி செய்ய வேண்டும். சுமார் 10 முதல் 30 பைல்கள் வரை காண்பிக்க செய்யலாம். இதனால் பைலை தேடி அலையாமல் உடனடியாக Open செய்யலாம்.

## Close மெனு:

Open செய்து பயன்பாட்டில் உள்ள பைலை மட்டும் Close செய்ய உதவுகிறது. Open செய்யப்பட்ட பைலில் எந்தவித மாற்றமும் செய்யவில்லை என்றால் கீழ்க்கண்ட விண்டோ தோன்றாது. ஆனால் ஒரு புதிய பைலை Open செய்தாலோ அல்லது ஏற்கனவே உள்ள பைலை Open செய்து மாற்றங்கள் செய்தாலோ மட்டும்தான் கீழ்கண்ட விண்டோ தோன்றும்.





Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

இங்கு Yes என்பதை Click செய்யவும். உடனே பைல் Save ஆகி Close ஆகிவிடும். No என்பதை கிளிக் செய்தால் Save ஆகாமல் Close ஆகும்.
Cancel என்பதை கிளிக் செய்தால் பழைய நிலைக்கே திரும்பிவிடும்.

**Save மெனு:** Ctrl + S

File → Save

தற்சமயம் வேலை செய்து கொண்டு இருக்கும் பைலை Save செய்ய உதவுகிறது. Saveஐ Click செய்ததும் கீழ்க்கண்ட விண்டோ தோன்றும். இங்கு தேவையான விவரங்களை பூர்த்தி செய்து Saveஐ கிளிக் செய்தால் Save ஆகிவிடும்.




இங்கு பைலுக்கு ஒரு பெயர் மற்றும் Save செய்யப்பட வேண்டிய இடம் ஆகிய விவரங்களை பூர்த்தி செய்து Saveஐ கிளிக் செய்யவும்.

**Save as மெனு:** Ctrl + Shift + S

File → Save As

ஒரு பைலில் மாற்றங்கள் செய்ய வேண்டும். ஆனால் அதே சமயத்தில் Original பைலும் வேண்டும் என கருதினால் இதன் மூலம் ஒரு Duplicate பைலை Create செய்து அந்த பைலில் மாற்றங்களைச் செய்யலாம். Original பைல் அப்படியே இருக்கும். மேலும் Jpeg, Tiff போன்ற பைல்களையும் உருவாக்கலாம்.

இந்த மெனுவை கிளிக் செய்ததும் மேலே உள்ளது போலவே ஒரு விண்டோ தோன்றும்.

அந்த விண்டோவில் புதிய பைலுக்கு ஒரு பெயர் மற்றும் Save செய்யப்பட வேண்டிய இடம் ஆகிய விவரங்களை பூர்த்தி செய்து Saveஐ கிளிக் செய்யவும்.

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

### Revert Menu:

File → Revert

ஒரு பைலில் வேலை செய்யும்பொழுது நாம் Ctrl + Sஐ பயன்படுத்தி அவ்வப்போது Save செய்து கொண்டு இருப்போம். மாற்றங்கள் செய்த பிறகு செய்த மாற்றங்கள் வேண்டாம் என கருதினால் இந்த Revertஐ கிளிக் செய்யவும். உடனே அந்த பைல் கடைசியாக Save செய்த நிலைக்கு வந்து விடும்.

அதாவது கடைசியாக Ctrl + S அல்லது Saveஐ அழுத்திய பிறகு ஏற்பட்ட மாற்றங்கள் Cancel ஆகிவிடும்.

### Place மெனு:

File → Place

போட்டோஷாப் தவிர கீழ்க்கண்ட மற்ற Softwareகளில் தயாரிக்கப்பட்ட பைல்களை Open செய்யலாம்.

1) EPS
2) Acrobat
3) Illustrator

### Import மெனு :

File → Import

Scan செய்த பைலை Save செய்யலாம்.

### Export மெனு:

File → Export

போட்டோஷாப் பைலை மற்ற பைல் Extentionகளில் மாற்றலாம். அதாவது மற்ற பைல் formatகளில் Save செய்யலாம்.

### WorKgroup மெனு:

File → Workgroup

ஒரே பைலை பல கம்ப்யூட்டர்களில் இருந்து கையாளலாம்.

அதாவது LAN மூலம் கையாளலாம்.


LAN என்பது Local Area Network என்பதன் சுருக்கம்.

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

## Automate மெனு:

File → Automate


இதன் கீழ் அனேக மெனுக்கள் உள்ளன.





## Contact Sheet: II மெனு:

File → Automate → Contact Sheet II…

ஒரு Folderல் உள்ள எல்லா போட்டோக்களையும் ஒரே Sheetல் வரிசையாக அடுக்கலாம். இந்த மெனுவை Click செய்யவும். உடனே கீழ்கண்ட விண்டோ தோன்றும். இங்கு Browse செய்து தேவையான போல்டரை select செய்து OKஐ Click செய்யவும். உடனே அடுத்த பக்கத்தில் உள்ளவாறு தோன்றும்.




Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.





இங்கு ஒரு Folderல் உள்ள எல்லா போட்டோக்களும் ஒரே Sheetல் வரிசையாக அடுக்கப்பட்டு இருப்பதை காணலாம்..

**Picture Package மெனு:**

File → Automate → Picture Package

ஒரு போட்டோவை பல Sizeகளில் Ups தயாரிக்கலாம் (12x18, 12x10)




இங்கு Browse செய்து தேவையான போட்டோவை select செய்து OKஐ Click செய்யவும். உடனே அடுத்த பக்கத்தில் உள்ளவாறு தோன்றும்.

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.




இங்கு ஒரு போட்டோவை பல Sizeகளில் (Ups) ஒரே Sheetல் வரிசையாக அடுக்கப்பட்டு இருப்பதை காணலாம்.

**Multi PDF to PSD மெனு:**

File → Automate → Multi PDF to PSD

ஒன்றுக்கு மேற்பட்ட Photoshop பைல்களை இணைத்து ஒரே PDF பைலாக மாற்றலாம். அதாவது அநேக போட்டோக்கள் ஒரே ஒரு PDFல் தோன்றும்.

**Jump to:**

File → Jump..

போட்டோஷாப்பில் இருந்து நேரடியாக Adobe Image Readyஐ Open செய்யலாம். இதே செயலை Edit in Image Ready என்ற மெனு மூலமும் செய்யலாம்.

**குறிப்பு:** Edit in Image Ready Photoshop CSல் உள்ளது. ஆனால் Photoshop 7ல் இல்லை என்பதை நினைவில் கொள்க.

**Exit:** Ctrl + Q

File → Exit

போட்டோஷாப் Softwareஐ Close செய்ய இது உதவுகிறது.

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

# Edit Menu

இது மெனு Barல் இரண்டாவதாக உள்ளது. இதன் கீழ் அனேக மெனுக்கள் உள்ளன.




**Undo Rectangular Marquee :** Ctrl+Z

ஒரு பைலில் கடைசியாக செய்த செயலை மட்டும் அதாவது மாற்றத்தை Cancel செய்யலாம்.

**Step Backward:** Ctrl + Alt + Z

ஒரு பைலில் கடைசியாக செய்த செயலை Cancel செய்யலாம். அதோடு மட்டுமின்றி வரிசையாக தொடர்ந்து செய்த மாற்றங்களை வரிசையாக பின்நோக்கி Cancel செய்து கொண்டே போகலாம்.

**Step Forward:** Ctrl + Shift + Z

அதிக அளவில் Step Backwardஐ உபயோகித்து செய்த மாற்றங்களை Cancel செய்து விட்டோம். திரும்பவும் வேண்டிய இடத்துக்கு முன்னாடி வர இது உதவுகிறது.

**Fade:**

Fade ஆகிவிட்டது என்றால் வெளுத்து விட்டது என்பதை அறிவோம். இது படத்தில் உள்ள Gradient Colourன் Opacityயை குறைக்க உதவுகிறது.

**Cut, Copy, Paste:**

இவைகள் தனியாக 79வது பக்கத்தில் விளக்கப்பட்டுள்ளது.

**Clear:**

Selection Tool மூலம் உருவாக்கிய ஒரு Selection பகுதியை அழிக்கலாம். இதே செயலை Del Key ஐ அழுத்தியும் செய்யலாம். Select செய்யப்பட்ட இடத்தில் Background நிறம் தோன்றும்.

**Check Spelling:**

அடிக்கப்பட்ட English வார்த்தைகளில் Spelling Mistake ஏற்பட்டால் அதை திருத்த பயன்படுகிறது.

**Find & Replace Text:**

அநேக பக்கங்களை அடித்த பிறகு Spelling Mistake உள்ள ஒரு வார்த்தை அநேக வரிகளில் இருந்தாலோ அல்லது அநேக பக்கங்களில் உள்ள வரிகளிலும் இருந்தாலோ அந்த வார்த்தை உள்ள எல்லா வரிகளிலும் சரியான Spellingஐ மாற்ற இது உதவுகிறது.

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

இதனால் Spelling Mistake உள்ள ஒரு வார்த்தையை எல்லா வரிகளிலும் சுலபமாக சரியான Spelling உடன் தோன்றச் செய்து விடலாம்.

### Fill:

Edit → Fill

58வது பக்கத்தில் விவரிக்கப்பட்டுள்ளது.

### Stroke:

Edit → Stroke

57வது பக்கத்தில் விவரிக்கப்பட்டுள்ளது.

### Free Transform:

Edit → Free Transform

88வது பக்கத்தில் விவரிக்கப்பட்டுள்ளது.

### Transform:

Edit → Transform

89வது பக்கத்தில் விவரிக்கப்பட்டுள்ளது.

### Define Brush :


Tool Box ல் அநேக Brush Toolகள் உள்ளன. அவைகள் தவிர நமது விருப்பப்படி புதியதாக ஒரு Brush Toolஐ உருவாக்க இது உதவுகிறது.

முதலில் ஒரு போட்டோ உருவத்தை Open செய்யவும்.

அடுத்து Define Brushஐ கிளிக் செய்து OK கொடுக்கவும்.

Edit → Define Brush




இங்கு Name என்ற இடத்தில் ஒரு பெயரை பூர்த்தி செய்து OKஐ கிளிக் செய்யவும்.

உடனே ஒரு புதிய Brush Tool உருவாகும்.

இப்பொழுது நாம் புதியதாக உருவாக்கிய Brush Tool ஆனது Option Barல் உள்ள Brush என்பதன் Pull Down Menuவில் சேர்ந்து கடைசியில் தோன்றும். இதை பயன்படுத்தி தேவையான மாற்றங்களை செய்யலாம்.

***குறிப்பு:*** *படங்களைத்தான் Brush ஆக மாற்றவேண்டும் என்பது இல்லை. ஒரு Selectionஐ Create செய்தும் உருவாக்கலாம்.*


புதியதாக உருவாக்கப்பட்ட Brush

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

## Preset Manager Menu:


Edit → Present Manager

Tool Boxல் அநேக Toolகள் உள்ளன. எல்லா Toolகளையும் நாம் எப்பொழுது பயன்படுத்துவது இல்லை. அவ்வாறு தேவைப்படாத Toolகளை Right Click செய்து Delete செய்யலாம். மேலும் சில அடிக்கடி பயன்படுத்தக்கூடிய புதிய Toolகளை சேர்க்கலாம்.




## Colour Settings : Shift+Ctrl+K

Edit → Color Settings...





இதில் எந்த மாற்றமும் செய்யத் தேவை இல்லை. தேவைப்பட்டால் செய்யலாம்.

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

**Preferences Menu:**

Edit → Preferences


இதில் அநேக மெனுக்கள் உள்ளன.




**General Menu:** Ctrl + K

Edit → Preferences → General

இதை கிளிக் செய்த உடன் கீழ்க்கண்ட விண்டோ தோன்றும்.




இங்கு நமக்கு தேவையான மாற்றங்களை செய்யலாம்.

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

**Transparency & Gamut.... Menu:**


Edit → Preferences → Transparency & Gamut ...

இங்கு இரண்டு Optionகள் உள்ளன.

1) Grid Size
2) Grid Colour

முக்கியமாக இவைகள் Transperencyன் அளவு மற்றும் நிறத்தினை மாற்ற உதவுகிறது. அதாவது Transparencyல் தோன்றும் கட்டங்களின் நிறம் மற்றும் Size ஆகியவற்றை Setting செய்ய உதவுகிறது. உதாரணமாக கட்டத்தின் நிறத்தை மாற்றலாம். அதே போல கட்டத்தின் அளவை சிறியதாகவோ அல்லது பெரியதாகவோ மாற்றலாம்.

இதை கிளிக் செய்த உடன் கீழ்க்கண்ட விண்டோ தோன்றும்.




இங்கு Grid Size, Grid Colors ஆகிய இடங்களில் உள்ள Pull Downஐ Click செய்து தேவையான Settingகளை செய்து கொள்ளலாம்.


Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

**Units & Ruler... Menu:**


Edit → Preference → Units & Ruler...

இங்கு Units மற்றும் Column Size ஆகிய இடங்களில் அளவுகளை காணலாம். இங்கு உள்ள Pull Downஐ Click செய்து தேவையான மாற்றங்களை செய்யலாம்.

மேலும் Print Resolution மற்றும் Screen Resolution ஆகியவற்றிலும் அளவுகளை காணலாம். தேவைப்பட்டால் இவைகளில் மாற்றங்கள் செய்யலாம்.




Units & Rulers என்ற இடத்தில் உள்ள Pull Downஐ Click செய்து மற்ற மெனுக்களையும் இங்கு இருந்தபடியே செயல் படுத்தலாம்





Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

## Memory & Image Cache:

Edit → Preferences → Memory & Image Cache

இங்கு Cache Settings மற்றும் Memory Usage ஆகியவற்றை காணலாம். நமது கம்ப்யூட்டரில் உள்ள Processor Speedற்கு தகுந்தவாறு மாற்றங்கள் செய்யலாம்.




**VIDEO EDITING - volume1 (தமிழ்)**

Professional Camera, Handycamகளில் எடுக்கப்படும் வீடியோக்களை Edit செய்து திருமண நிகழ்ச்சிகளின் வீடியோ போலவே நல்ல வீடியோக்களை மிகவும் சுலபமாக நீங்களே தயாரிக்கலாம்.

- ★ Video Capturing,
- ★ Fireware Card
- ★ Pinnacle Capture card
- ★ Video Editing
- ★ Titling
- ★ Transperancy,
- ★ Transitions
- ★ Hollywood Effects
- ★ Exporting
- ★ CD, DVD Writing


**3 DVDகள் இலவசம்**

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

## Guides, Grid & Slices

Edit → Preferences → Guides Grid & Slices

இங்கு Guides Grid & Slices ஆகியவற்றில் தற்போது உள்ள நிறங்களை காணலாம் தேவைப்பட்டால் மாற்றலாம்.





Gridline every என்ற இடத்தில் Grid lineகளுக்கு இடையே உள்ள தூரத்தை தீர்மானிக்கலாம்.

Subdivisions என்ற இடத்தில் தேவைப்படும் Subdivisionகளை தீர்மானிக்கலாம்.

Slices கீழ் உள்ள Line Color என்ற இடத்தில் தேவைப்படும் Colorஐ தீர்மானிக்கலாம்.

GK




## Image Menu

இது மெனு Menu Barல் மூன்றாவதாக உள்ளது. இதன் கீழ் அநேக மெனுக்கள் உள்ளன. தொழில் ரீதியாக கீழ்க்கண்ட நபர்களுக்கு மிகவும் அதிக அளவில் பயன்படக்கூடிய மெனுக்கள் இங்கே உள்ளன.

1) Offset Printing செய்பவர்கள்.


2) Web Design செய்பவர்கள்.

3) Photo Grapherகள்

## Mode Menu:

Image → Mode

இதன் கீழ் அநேக மெனுக்கள் உள்ளன.




## Gray Scale Menu:

Image → Mode → Gray Scale

சாதாரணமாக வண்ணப்படங்கள் இரண்டு Modeகளில் ஏதாவது ஒன்றில்தான் இருக்கும்.

1) RGB Mode

2) CMYK Mode

இவ்வாறு உள்ள வண்ணப்படங்களை Black & White படமாக மாற்றலாம்.

**Adjustments Menu:** இது பற்றி தனியாக விவரிக்கப்பட்டுள்ளது.

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

## Duplicate Menu:

Image → Duplicate

ஒரு பைலை Duplicate நகல் எடுத்து அந்த பைலில் தேவையான மாற்றங்களை செய்து பார்க்கலாம். இந்த பைலை தேவைப்பட்டால் Save செய்யலாம். வேண்டாம் என கருதினால் Save செய்யாமலே Close செய்து விடலாம்.

அநேகமாக இது Save As மெனு போலவே பயன்படும். இரண்டிற்கும் உள்ள முக்கிய வேறுபாடு Save Asல் பைல் கண்டிப்பாக Save செய்யப்படும். ஆனால் இங்கு Save செய்யத் தேவை இல்லை.

ஒரு பைலில் தாற்காலிகமாக மாற்றங்கள் செய்து பயிற்சி பெற இது மிகவும் பயன்படும். ஒரு பைலை Open செய்த பிறகு Duplicate என்பதை கிளிக் செய்யவும்.

உடனே கீழ்க்கண்ட விண்டோ தோன்றும்.




பைலுடன் Copy என தோன்றும். தேவைப்பட்டால் வேறு ஒரு பெயரை பூர்த்தி செய்து OKஐ கிளிக் செய்யவும்.

## Image Size Menu:

Image → Image Size

ஒரு பைல் கீழ்க்கண்ட அம்சங்களை கொண்டுள்ளது.

1) Pixel


2) Width, Height

3) Resolution

ஏற்கனவே உள்ள ஒரு பைலில் தேவைப்பட்டால் இவற்றில் மாற்றங்கள் செய்யலாம். ஒரு பைலை Open செய்து இந்த மெனுவை கிளிக் செய்யவும்.

உடனே கீழ்க்கண்ட விண்டோ தோன்றும்.

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.




இங்கு கொடுக்கப்பட்டுள்ள விவரங்கள் தற்போது இந்த பைலில் உள்ளவைகள். இவற்றில் தேவையான மாற்றங்களை செய்யலாம்.

மாற்றங்கள் செய்த பிறகு அதற்கு தகுந்தவாறு படத்தின் தோற்றத்தில் மாற்றங்கள் ஏற்படும். இரண்டு படங்களிலும் உள்ள Image Sizeஐ கவனித்தால் வித்தியாசத்தை பார்க்கலாம்.

GK

## அன்பான வேண்டுகோள்

எங்களது DVD மற்றும் VCDக்கள் Copy Protect செய்யப்பட்டுள்ளன. எனவே Disk Copy மூலம் Copy செய்ய இயலாது. Hard Diskலும் Copy செய்ய இயலாது.

எனவே தயவு செய்து எங்களது Diskகளை Copy செய்ய முயற்சிக்க வேண்டாம் என பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

GK

தங்கள் அன்பன்,


செம்மங்குடி **Gopalakrishnan Alias G.K.**

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

## Rotate Canvas Menu:

Image → Canvas

இதன் கீழ் அநேக மெனுக்கள் உள்ளன.




போட்டோக்களை நமது விருப்பப்படி பல கோணங்களை சுழற்றி தோன்றச் செய்ய பயன்படுகிறது. இவற்றில் உள்ள கீழ்க்கண்ட மெனுக்கள் Edit மெனுவில் உள்ள Transform மெனுவிலும் உள்ளன. அவைகள் பற்றி ஏற்கனவே விவரிக்கப்பட்டுள்ளது.

மெனுக்களின் விவரம்:

180 $^{0}$

90 $^{0}$ cw

90 $^{0}$ ccw

Arbitrary

Flip Canvas Horizontal

Flip Canvas Vertical

Arbitrary: இதன் மூலம் போட்டோவை தேவையான கோணத்தில் சாய்வாக தோன்றச் செய்யலாம்.



Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.


# Layer Menu

மெனு Barல் இந்த Layerமெனு நான்காவதாக உள்ளது. இதன் கீழ் அனேக மெனுக்கள் உள்ளன.Layer என்றால் ஒன்றன் மீது ஒன்று அடுக்கி வைக்கப்பட்டது என்று பொருள். போட்டோஷாப்பில் அனைத்து செயல்களும் இந்த Layerகளில்தான் செய்யப்படுகின்றன. ஒர பைலில் பல உருவங்கள் இருந்தால் அந்த படம் பல Layerகளினால் உருவாக்கப்பட்டதாக இருக்கும். ஒவ்வொரு உருவமும் தனித்தனி Layerகளில் இருக்கும்.

Text அதாவது எழுத்துக்கள் தனியாக ஒரு Layerல் இருக்கும். மொத்தத்தில் ஒரு பைல் பல Layerகளின் தொகுப்பு என்பதை மனதில் கொள்க.


இவ்வாறு தனித்தனி Layerகளில் இருப்பதால் நமக்கு தேவையான மாற்றங்களை ஒரு Layerல் உள்ள உருவத்திலோ அல்லது Textலோ செய்யும் பொழுது மற்ற Layerகளில் எந்தவிதமான பாதிப்பும் ஏற்படாது.

ஒர Layerல் உள்ள உருவத்தை (Image) நமது விருப்பப்படி எங்கு வேண்டுமானாலும் நகர்த்தலாம். தேவையான மாற்றங்களை செய்யலாம். மேலும் அநேக Layerகள் இருக்கும்பொழுது Layerகளின் வரிசையையும் மாற்றி அமைக்கலாம். அதாவது 3வது வரிசையில் உள்ள Layerஐ 1வது நிலைக்கு அதாவது மேலே முதலாவதாக கொண்டு வரலாம்.




இங்கு நான்கு Text Toolகளையும் பயன்படுத்தி வரையப்பட்டுள்ளன.

இங்கு உள்ள North, South, East, West ஆகியவைகள் தனித்தனி Layerகளில் உள்ளன.




இது Layer Pallette. F7 கீயை அழுத்தினால் தோன்றும்.


இங்கு நான்கு Layerகளையும் தனித்தனியாக காணலாம்.

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.


**Layer Menu:** Shortcut Key - Shift + Ctrl + N

இதன் கீழ் அநேக மெனுக்கள் உள்ளன.

Layer → New → Layer....




ஒரு புதிய Layerஐ Create செய்யலாம். இதை கிளிக் செய்த உடன் கீழ்க்கண்ட விண்டோ தோன்றும்.




நமது விருப்பப்படி கீழ்க்கண்ட மாற்றங்களை செய்யலாம்.


1) Layerருக்கு ஒரு பெயர்
2) நிறம் சுலபமாக கண்டுபிடிக்க
3) Mode
4) Opacity

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

**Layer from Background Menu:**

Layer → New → Layer from Background

இதை கிளிக் செய்த உடன் கீழ்க்கண்ட விண்டோ தோன்றும்.




Background நிறத்தில் ஒரு Image Layer உருவாகும்.


**Layer Via Copy Menu:** Ctrl + J

Backgroundல் JPEG பைல் இருந்தால் ஒரு புதிய Layer Create ஆகும்.

**Duplicate Layer Menu:**

Layer → Duplicate Layer

ஒரு Layerல் இருந்து வேறு ஒரு புதிய Layerஐ உருவாக்கலாம்.




GK GK

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

**Delete Menu:**

Layer → Delete → Layer

ஒரு Layerஐ Delete செய்யலாம். Layer முதலில் Active ஆக இருக்க வேண்டும். கீழ்க்கண்ட விண்டோ தோன்றும்.





இங்கு Yesஐ கிளிக் செய்தால் Delete செய்யப்பட்டுவிடும்

**Layer Properties Menu:**

Layer → Layer Properties

ஒரு பைலில் அநேக Layerகளை பயன்படுத்துகிறோம். எனவே அவற்றை வரிசையாக Layer Palletல் காணலாம்.

நாம் சுலபமாக அடையாளம் காண Layerருக்கு பெயர் மற்றும் colour கொடுக்கலாம்.




**Copy Layer Style:**

Layer → Layer Style → Copy Layer Style

நாம் கடின உழைப்புடன் ஒரு Layerல் அநேக Effectகளை புகுத்தி இருப்போம். அதை அந்த Effectகளுடன் Copy செய்து ஒரு புதிய Layerஐ உருவாக்க Copy செய்யலாம்.

**Paste Layer Style:**

Layer → Layer Style → Paste Layer Style

Copy செய்த Layerஐ ஒரு புதிய Layerஐ Select செய்து Paste செய்யலாம்.

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

**Paste Leyer Style to linked:**

Layer → Layer Style → Paste Layer Style to Linked

Linked Layerஐ மட்டும் பார்க்கலாம்.

**Clear Layer Style:**

Layer → Layer Style → Clear Layer Style

ஒரு Layerல் உள்ள அனைத்து Effectகளையும் Delete செய்யலாம்.

**Global LIght:**

Layer → Layer Style → Global Light

Emboss Effect மூலம் நிழல்களை தோன்றச் செய்கிறோம். அந்த நிழலை மாற்றி அமைக்க உதவுகிறது.

**Create Layer:**

Layer → Layer Style → Create Layer

ஒரு புதிய Layerஐ Create செய்யலாம்.

**Hide All Effects:**

Layer → Layer Style → Hide All Effects

ஒர Layerல் உள்ள எல்லா Effectகளையும் மறைத்து வைக்கலாம். அதாவது Effectகள் இல்லாமல் Layerஐ தோன்றச் செய்யலாம்.

**Scale Effects:**

Layer → Layer Style → Scale Effects

ஒரு Layerல் உள்ள அனைத்து Effectகளையும் ஒன்றாக சேர்க்க வேண்டும்.

பிறகு அதன் மதிப்பை கூட்டவோ குறைக்கவோ செய்யலாம்.


**Computer Hardware Volume -1**
வாங்கி விட்டீர்களா?

* Complete Assembling
* Servicing
* Trouble Shooting
* O/S Installation
* Device Drivers
* CMOS SETUP(LIVE)
* FDISK Utility (LIVE)
* Windows XP Installation (LIVE)

மிகவும் எளிய உரைநடையில் படிப்பவர்கள் நன்கு புரிந்து கொண்டு செயல்படுவதற்கு ஏதுவாக எழுதப்பட்டுள்ளது. கண்டிப்பாக மிக மிக உபயோகமாக இருக்கும்.


Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

**New Fill Layer:**

Layer → New Fill Layer

Select செய்யப்பட்ட பகுதியை Fill செய்யலாம்.

1) Solid Colour

2) Gradient

3) Pattern

இவைகளை பயன்படுத்தி Fill செய்யலாம்.

**Type:**

Layer → Type

இது ஒரு Text Tool. அதாவது எழுத்துக்களை பயன்படுத்த உதவும் Tool.

**Merge Down:**

Layer → Merge Down

Layer Palleteல் Layerகள் வரிசையாக உள்ளன. இரண்டு Layerகளை அதாவது மேலும் கீழுமாக உள்ள இரண்டு Layerகளை ஒன்று சேர்த்து ஒரே Layerஆக மாற்ற உதவுகிறது. இது முதலில் மேல் Layerஐ Select செய்யவும். அடுத்து அதற்கு கீழ் உள்ள Layerருடன் சேர்க்கவும்.

**Merge Visible:**

Layer → Merge Visible

Visibleஆக உள்ள எல்லா Layer களும் மட்டும் Background Layerஆக மாறிவிடும்.

**Flattern Image:**


Layer → Flattern Image

ஒரு பைலில் உள்ள எல்லா Layerகளையும் Background Layer ஆக மாற்றலாம்.

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

# Select Menu

மெனு Barல் இந்த Layerமெனு ஐந்தாவதாக உள்ளது. இதன் கீழ் அநேக மெனுக்கள் உள்ளன.




**All :** Ctrl + A

ஒரு பைலில் உள்ள அனைத்தையும் செலக்ட் செய்யலாம்.

**Deselect:** Ctrl + D

ஏற்கனவே செய்த ஒரு Selectionஐ Cancel செய்யலாம்.

**Reselect:**

ஏற்கனவே ஒரு Selectionஐ Cancel செய்த பிறகு திரும்பவும் அந்த Selectionஐ கொண்டு வர இது உதவுகிறது.

**Grow:**

Select → Grow

Geow என்றால் வளர்தல் அல்லது பெரியதாக ஆக்குதல் என்று பொருள்

Magic Wand Tool மூலம் ஒரு Selectionஐ உருவாக்குகிறோம். அந்த Selectionஐ கொஞ்சம் பெரியதாக மாற்ற இது உதவுகிறது.

**Similar:**

Select → Similar

ஒரு படத்தில் ஒரே நிறம் ஆங்காங்கே பல இடங்கிளல் இருந்தால் அவ்வாறு அந்த நிறம் உள்ள எல்லா இடங்களையும் செலக்ட் செய்துவிடலாம்.

Similar என்றால் ஒரே மாதிரியாக உள்ளவைகள் என்று பொருள். Magic Wand Tool மூலம் ஒரு படத்தில் ஒரு Selectionஐ உருவாக்குகிறீர்கள். அடுத்து Selectல் உள்ள Similar என்பதை கிளிக் செய்யவும். உடனே அந்த படத்தில் அதே நிறம் உள்ள மற்ற இடங்களும் Selection செய்யப்பட்டு விடும்.

**Transform Selection:**


Select → Transform Selection

சாதாரணமாக ஒரு முறை Selectionஐ உருவாக்கினால் மாற்ற இயலாது,

ஆனால் இதன் மூலம் Select செய்யப்பட்ட பகுதியை (Selectionஐ) சிறியதாகவோ அல்லது பெரியாகவோ மாற்றலாம். அதாவது Selectionஐ மாற்றலாம்.

Marque Tool மூலம் ஒரு பகுதியை செலக்ட் செய்யவும். அடுத்து Transform Selectionஐ கிளிக் செய்யவும். இனி செலக்ட் செய்யப்பட்ட பகுதியை சிறியதாகவோ அல்லது பெரியதாகவோ தோன்றச் செய்யலாம்.

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.




## View Menu

View என்றால் பார்த்தல் என்று பொருள். மெனு Barல் இந்த View மெனு ஆறாவதாக உள்ளது. இதன் கீழ் அநேக மெனுக்கள் உள்ளன.

**Zoom in:** - Ctrl +

படத்தை பெரியதாக தோன்றச் செய்யலாம்.

**Zoom out** :- Ctrl -

படத்தை சிறியதாக தோன்றச் செய்யலாம்.

**Fit on Screen:**

படத்தினை திரை முழுவதும் உள்ள அளவிற்கு தோன்றச் செய்யலாம். அதாவது Screen Sizeற்கு தோன்றச் செய்யலாம்.

**Actual Pixels:**

படத்தை 100% அளவில் பார்க்கலாம்.

**Print size:**

View → Print size

படத்தை Print செய்தால் எந்த அளவில் இருக்குமோ அந்த Sizeல் பார்க்கலாம்.

**Screen Mode:**

View → Screen Mode

மூன்று விதமான Modeகள் உள்ளன. விவரம் 77வது பக்கத்தில் பார்க்கவும்.

**Grid:**

View → Show → Grid

Grids என்றால் கோடுகள். படத்தில் குறுக்காகவும், நெடுக்காகவும் அநேக கோடுகளை தோன்றச் செய்யலாம். அதாவது Horizontal Line மற்றும் Vertical Line ஆகியவற்றை தோன்றச் செய்யலாம்.

**Rulers: Ctrl + R**

View → Rulers

Ruler என்றால் Scale என்று பொருள். அதாவது Scaleல் உள்ள கோடுகள்.

இதை கிளிக் செய்த உடன் பைலின் இடது பக்கத்திலும் மேல் பக்கத்திலும் Scaleல் உள்ள கொடுகள் போன்று தோன்றும். அதாவது Scale தோன்றும்.

**Lock Guides:**

View → Lock Guides

Guide Lineஐ Lock செய்யலாம். Lock செய்த பிறகு இருக்கும் இடத்தில் இருந்து நகர்த்த முடியாது.

**Clear Guides:**

View → Clear Guides

Guide Lineகள் வேண்டாம் எனக் கருதினால் Delete செய்து விடலாம்.

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

## Window Menu





மெனு Barல் இந்த Window மெனு கடைசியாக உள்ளது. இதன் கீழ் அநேக மெனுக்கள் உள்ளன. போட்டோஷாப்பை Open செய்த பிறகு தோன்றும் அநேக Palleteகளும் இந்த மெனுவின் கீழ் உள்ளன.

### Navigator:

ஒரு படத்தின் அளவை மிகவும் பெரிய அளவில் தோன்றச் செய்யலாம். Hand Tool மூலம் படத்தை நகர்த்தியும் பார்க்கலாம்.

ஒரு குறிப்பிட்ட பகுதியை தோன்றச் செய்ய இந்த Navigator உதவுகிறது.

இதை கிளிக் செய்ததும் ஒரு விண்டோ தோன்றும். அதில் சிவப்பு நிற கட்டம் ஒன்று காணப்படும். அதுதான் Navigator. அதை நகர்த்தினால் அந்த கட்டத்திற்குள் இருக்கும் உருவம் படத்தில் பெரியதாக தோன்றும்.







Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

**Info:**

Window → Info

Info. என்பது Information என்பதன் சுருக்கம். Information என்றால் தகவல்கள் என்பது எல்லோரும் அறிவோம். இதன் மூலம் கீழ்க்கண்ட விவரங்களை அறியலாம்.

1) RGB
2)CMYK
3) X axis
4) Y axis
5) width
6) Height




இந்த மெனுவை கிளிக் செய்த உடன் மவுஸ் பாயிண்டர் படத்தின் மீது + Plus குறியாக மாறிவிடும். மவுஸ் பாயிண்டரை ஒரு இடத்தில் வைத்தால் அருகில் உள்ள விண்டோ தோன்றும். இந்த விண்டோவில் அனைத்து விவரங்களையும் காணலாம்.


செம்மங்குடி கோபாலகிருஷ்ணனின்

**Learn In a Week ஒரே வாரத்தில் கற்கலாம்**

Computer Basics, Office Automation, Hardware, Networking, Video Editing, Photoshop, Pagemaker

உங்களை உங்களது வீட்டில் இருந்தபடியே கண்டிப்பாக ஒரு தேர்ச்சி பெற்ற Computer Engineer ஆக எங்களது புத்தகங்கள்+VCD/DVD மூலம் மாற்ற முடியும்

★ இது வரை கம்ப்யூட்டரை தொடாதவர்கள் இனி கம்ப்யூட்டரில் வேலை செய்யலாம்.
★ இல்லத்தரசிகள் மற்றும் ஒய்வு பெற்றவர்கள் வரை அனைவரும் மிகவும் சுலபமாக கற்கலாம்.
★ வயது வரம்பு, அடிப்படை கல்வி தகுதிகள் தேவையே இல்லை.
★ ஆர்வமும் தன்னம்பிக்கையும் மட்டுமே போதுமானது.
★ அனைத்து விதமான கம்ப்யூட்டர்களையும் சர்வீஸ் செய்யலாம்.
★ எல்லா விதமான கம்ப்யூட்டர்களையும் அஸம்பிள் செய்யலாம்.
★ ஆங்கிலத்தில் அதிக தேர்ச்சி இல்லையே என கருதவே வேண்டாம். வங்கிகள், அலுவலகங்கள், Browsing Center ஆகியவற்றில் உள்ளது போல அனேக கம்ப்யூட்டர்களை இணைத்து ஒரு LAN நெட்வொர்க்கை மிகவும் சுலபமாக அமைக்கலாம்.
★ Video மற்றும் Photo Shop தொழிலை கற்று மாதம் 25 ஆயிரம் முதல் 1 லட்சம் பணம் சம்பாதிக்கலாம்.
★ உங்கள் குடும்பத்திலுள்ள அனைவருமே கற்கலாம்.
★ இது கதையே அல்ல நிஜமோ நிஜம்

கம்ப்யூட்டரா! தெரியாது என இனி சொல்லவே கூடாது



Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

**Color Menu:**


Window → Colour

ஒரு கலரை உருவாக்க இரண்டு Modeகள் உள்ளன.

1) RGB

2) CMYK

இவைகளுக்கு தனித்தனியாக Colour Palleteகள் உள்ளன. இவைகள் மூலம் தேவையான கலர்களை உருவாக்கலாம். மேலும் விருப்பமான கலரை Foreground மற்றும் Backgroundல் நிரப்பலாம்.





**Swatches:**

Window → Swatches

இங்கு அநேக கலர்களை பார்க்கலாம். RGB Modeற்கு தனியாக உள்ளது. அதே போல CMYK Modeற்கும் தனியாக உள்ளது. இங்கு ஏகப்பட்ட கலர்கள் தானாகவே (By default) இருப்பதால் நாம் புதியதாக ஒரு கலரை உருவாக்க தேவை இல்லை.

சாதாரணமாக Colour Packerல் தேவையான கலரை Select செய்வோம். இது அதைவிட உபயோகமாக இருக்கும்.





இவற்றில் உள்ள Colourஐ கிளிக் செய்தால் Tool Boxல் உள்ள Foreground அந்த நிறத்திற்கு மாறிவிடும்.

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.


**Styles:**

Window → Styles

அதாவது Readymade Designகள் இங்கு ஏராளமாக உள்ளன. இவைகள் மூலம் நாம் மிகவும் அழகான டிசைன்களை சுலபமாக உருவாக்கலாம். நேரத்தை மிச்சப்படுத்தலாம்.




Tool Boxல் உள்ள Shape Toolகளில் இந்த டிசைன்களை உருவாக்கலாம். மேலும் Tool Boxல் Shape toolகளில் கடைசியாக உள்ள Custom Toolஐ செலக்ட் செய்து கீழ்க்கண்ட விண்டோவில் இருந்து தேவையான Ready Made டிசைன்களை உருவாக்கி அவற்றில் இந்த Styleகளை நிரப்பலாம்.




Custom Toolன் மூலம் தோன்றும் Shape வடிவங்கள்

**குறிப்பு:**
இந்த Style டிசைன்களை Shape Toolகளில் மட்டுமே பயன்படுத்த முடியும் என்பதை மனதில் கொள்க.



உருவாக்கப்பட்ட பலவகை Shapeகள்

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

செம்மங்குடி கோபாலகிருஷ்ணனின்

# Learn In a Week ஒரே வாரத்தில் கற்கலாம்

உங்களை உங்களது வீட்டில் இருந்தபடியே கண்டிப்பாக ஒரு தேர்ச்சி பெற்ற Computer Engineer ஆக எங்களது புத்தகங்கள்+DVD மூலம் மாற்ற முடியும்

ஓய்வு பெற்றவர்கள், இல்லத்தரசிகள் அனைவரும் மிகவும் சுலபமாக கற்கலாம். வயது வரம்பு, கல்வி தகுதிகள் தேவையே இல்லை. ஆங்கிலத்தில் அதிக தேர்ச்சி இல்லையே என கருதவே வேண்டாம். ஆர்வமும் தன்னம்பிக்கையும் மட்டுமே போதுமானது. குடும்பத்திலுள்ள அனைவருமே கற்கலாம்.

அனைத்து விதமான கம்ப்யூட்டர்களையும் அஸம்பிள் செய்யலாம், சர்வீஸ் செய்யலாம். Laptopஐயும் சுலபமாக பிரித்து திரும்ப அஸம்பிள் செய்யலாம், சர்வீஸ் செய்யலாம்

வங்கிகள், அலுவலகங்கள், Browsing Center ஆகியவற்றில் உள்ளது போல அனேக கம்ப்யூட்டர்களை இணைத்து ஒரு LAN நெட்ஒர்க்கை மிகவும் சுலபமாக அமைக்கலாம்.

DTP operator வேலைக்கு மிக அதிக அளவில் தேவை உள்ளது. எனவே DTPக்கு தேவையான Photoshop, CorelDraw, Pagemaker ஆகியவற்றை மிகவும் சுலபமாக கற்று எளிதில் வேலை வாய்ப்பை பெறலாம், அல்லது DTP தொழிலை சுயமாக செய்யலாம்.

Computer இல்லாத அலுவலகங்களே இல்லை. எனவே ஒரு அலுவலகத்தில் Computerல் செய்ய வேண்டிய வேலைகளை Office Automation புத்தகத்தின் மூலம் சுலபமாக கற்று அலுவலகத்தில் பயம் இல்லாமல் வேலைகளை செய்யலாம்.

Professional Camera, Handycamகளில் எடுக்கப்பட்ட Videoக்களை Edit செய்து திருமண நிகழ்ச்சிகளின் வீடியோக்களை போலவே சுலபமாக தயாரிக்கலாம். சுயமாக Video, Photo தொழில் துவங்கி நல்ல வருவாய் ஈட்டலாம்

**எங்களிடம் கிடைக்கும் புத்தகங்கள்:**

★**Computer Hardware -** 3 Volumeகள்

1) **Volume - 1**
2) **Volume - 2**
3) **Volume - 3**

★**Networking - LAN -** 2 Volumeகள்

1) **Volume - 1**
2) **Volume - 2**

★**Computer Basics**

★**Office Automation**

★**Laptop Servicing**

★**Video Editing**

★**Page Maker**

★**Photoshop**

★**CorelDraw**

★**Export Business**

இது வரை கம்ப்யூட்டரை தொடாதவர்கள் இனி கம்ப்யூட்டரில் சுலபமாக வேலை செய்யலாம்.

ஏற்றுமதி வியாபாரத்தை வெற்றிகரமாக செய்து குபேரனாக ஆகலாம்

இது கதையேஅல்ல நிஜமோ நிஜம்

**Free 3 DVDs with each Book**

**CIIT Infotech** என்ற பெயருக்கு DD அல்லது MO அனுப்பவும். VPP கிடையாது.

**CIIT Infotech**, No. 45, 2nd Floor, 70th Street, 11th Sector, K.K. Nagar, Chennai - 600 078, Tamil Nadu, India. Cell: 9444451485, 9840170413

www.ciitinfotech.com **E-Mail:** vgk_gk@yahoo.co.in